மாலை : 49 மணி : 7 ஜூலை 2007 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு



அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில்

அம்மன் கோயில் படைவீடு

போளூர் வட்டம்–திருவண்ணாமலை மாவட்டம்,
தொலைபேசி: 04181–248224, 248424

அன்புடையீர் !

தொண்டை மண்டலத்தில் புகழ்பெற்ற சக்தித்தலங்களுள் சீரும் சிறப்புமுடையது கமண்டல நதிக்கரையில் அமைந்துள்ள படைவீடு அருள்மிகு ரேணுகா தேவி அம்மன் திருக்கோயிலாகும்.

அம்மன் சுயம்புவாய் எழுந்தருளியுள்ளதுடன் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளையும் உடன்கெண்டு அவர்களிலும் பேருருக்கொண்டு உலகில் சக்தியே எல்லாமென எடுத்துக்காட்டி அருள்புரிந்து வருகிறாள். சக்திபீடங்கள் 64ல் படைவீடு ஒன்றெனவும் பகரப்படுகிறது.

சக்தித்தலங்களுள் சிறந்ததாகவும், சித்தர்கள் பலரின் வழிபாட்டிற்குரியதாகவும் விளங்கும் இத்திருத்தலத்தில் ஆண்டு தோறும் ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி தொடர்ந்து ஏழு வெள்ளிக்கிழமைகளில் பெருந்திருவிழா நடைபெற்றுவருகிறது.

ஆடி வெள்ளிப்பெருந்திருவிழா இவ்வாண்டு 20–7–2007 முதல் 31–8–2007 வரை மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

20–7–2007 முதல் வெள்ளித்திருவிழா	சரஸ்வதி அலங்காரம்
27–7–2007 இரண்டாம் வெள்ளித்திருவிழா	ஸ்ரீதுர்க்கை அலங்காரம்
03–8–2007 மூன்றாம் வெள்ளித்திருவிழா	சிவலிங்க ஆலிங்கன பூஜை அலங்காரம்
10–8–2007 நான்காம் வெள்ளித்திருவிழா	மஹா லட்சுமி அலங்காரம்
17–8–2007 ஐந்தாம் வெள்ளித்திருவிழா	மகிஷாசூரமர்த்தினி அலங்காரம்
24–8–2007 ஆறாம் வெள்ளித்திருவிழா	இராஜராஜேஸ்வரி அலங்காரம்
31–8–2007 ஏழாம் வெள்ளித்திருவிழா	இராமர்–சீதை அலங்காரம்

இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் **நவராத்திரி திருவிழா** இவ்வாண்டும் **12–10–2007 முதல் 21–10–2007** முடிய மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்த நவராத்திரி திருவிழாவில் அருள்மிகு **ரேணுகாம்பாள் அம்மனுக்கு இலட்சார்ச்சனை** நடைபெறும். இலட்சார்ச்சனையில் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ கலந்து கொள்பவர்களுக்கு அம்மன் உருவம் பொறித்த வெள்ளி டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

நேரடி இலட்சார்ச்சனைக் கட்டணம் **ரூ.125/–**(ரூபாய் நூற்றி இருபத்தைந்து மட்டும்)
தபால் மூலம் இலட்சார்ச்சனைக்கட்டணம் **ரூ.150/–** (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்)

அன்பர்கள் அனைவரும் படைவீடு அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருத்தலத்திற்கு வந்து வழிபட்டு அம்மன் அருள்பெற வேண்டுகிறோம்.

தொகையை மணியார்டர் மூலமாகவோ. டிமாண்ட் டிராப்டாகவோ,

நிர்வாக அதிகாரி,
அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில்,
அ.கோ.படைவீடு அஞ்சல், போளூர் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்,
அஞ்சல் எண்–606905.

Executive officer.
Arulmigu Renugambal
Amman Temple.
A.K.Padaiveedu post.
Polur Taluk, Thiruvannamalai Dt.,
pin 606905.

என்ற முகவரிக்கு தங்களுடைய பெயர், மற்றும் முழு விபரங்களையும் எழுதி அனுப்பிப்பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது, டிமாண்ட் டிராப்ட் எடுப்போர் படைவீடு இந்தியன் வங்கிக் கிளையில் மாற்றத்தக்க வகையில்**"Indian Bank Padavedu"** என்று குறிப்பிட்டு **DD** எடுத்து அனுப்பவும்.

மேலும் விபரங்கள் **www.renugambal.com** என்ற இணையதளத்தில் பார்த்துத்தெரிந்து கொள்ளவும்.

அம்மன் அருள்பெற்று வளமுடன் வாழ்க !

இங்ஙனம்

எஸ். கிருஷ்ணன் எம்.ஏ.,பி.,எல்., செயல் அலுவலர். **தெ.வேணுகோபால்,** அறங்காவலர் குழுத்தலைவர்.

இரா.காளிதாஸ், ப. நேதாஜி, சுலோசனா திருநாவுக்கரசு, சு.சம்பத்
அறங்காவலர்கள்.

திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2038 ஸர்வஜித்–ஆடி
மாலை 49 மணி 7 ஜுலை 2007

அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

வணக்கம் !

கார், கூதிர், இளவேனில். முதுவேனில், முன்பனி, பின்பனி. எனும் பருவ காலத்தைப் போன்று ஆனி கழிந்து ஆடிபிறக்கும் இத்திங்கள் பண்டிகைகள் தொடங்கும் பருவ காலம். மாரியம்மன், கன்னிமார், மதுரைவீரன், மாடசாமி, ஐயனார் எனும் நம் கிராம தெய்வங்களுக்கு பள்ளயம் போட்டு வழிபடுவதும், ஆடிப்பெருக்கு விழாவினைத் தன்னகத்தே கொண்டதுமான அற்புதத் திங்கள். இத்திங்களில் ஆறுகளில் மக்கள் வாழ்வை வளப்படுத்தும் நீர் புதுப்புனலாக பாய்ந்தோடும். ஆடிப்பூரத்திருநாள், ஆண்டாள் அவதரித்த அற்புதத் திருநாள். தேவி தபசு இருந்து, இறைவன் சங்கரநாராயணராகக் காட்சி தந்த சிறப்பு மிக்க திங்கள். இத்தகைய சிறப்புகள் கொண்ட இந்த ஆடித்திங்களில், நடைபெறும் ஆன்மிக விழாக்களில் நாமும் கலந்து கொண்டு இறையருள் பெறுவோமாக.

கண்ணனின் நினைவோடு உறங்கும் ஆண்டாள், கனவில் கண்ணனின் கரம் பிடிப்பது போல் கனவு காணுகிறாள். தனது கனவினை, நனவில் கண்ணனைக் கரம் பிடித்தால் என்னென்ன நிகழ்வுகள் நடக்குமோ அவற்றையெல்லாம் " கனாக் கண்டேன் தோழி நான் " என ஒவ்வொரு பாடலிலும் கண்ணனைக் கண்டு களித்த கிருஷ்ணானுபவத்தின் உச்சத்தை தனது பதினான்கு திருவாய் மொழிகளில் ஆண்டாள் வெளிப்படுத்தியுள்ள உரிய பாங்கினை " பாடிக் களித்த ஆடிப்பூராள் " எனும் தலைப்பில் தனக்கே உரிய பாணியில் தவழவிட்டுள்ளார் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள்.

மன்னனின் ஆணைக்கு அடிபணியாததால் கல்லைக் கட்டி கடலில் வீசிய போதும், கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய, உறுதி கொண்ட நெஞ்சம் கொண்ட திருநாவுக்கரசுப் பெருமானின் சொல்லுறுதிச் சிறப்புகளை தொகுத்து வழங்கியுள்ளார் பேராசிரியர் ச. கணபதிராமன் அவர்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தின் ஏழாவது பதிகமாகிய திருவெம்பாவையையும் " இறையனார் களவியலுக்கு " இலக்கியம் கண்ட திருக்கோவையார் எனும் நூலின் பெருமையையும் ஆய்வு செய்து " பாவையும் கோவையும் " எனத்தலைப்பிட்டு வழங்கியுள்ளார். திருவாவடுதுறை ஆதீன சித்தாந்தப் பேராசிரியர் சித்தாந்த வித்யாநிதி சு. சண்முகவேல் அவர்கள்.

பகவத் கைங்கரியத்தை விட பாகவத கைங்கர்யமே சிறந்தது என்ற சிறந்த கொள்கையினை உடைய திருமங்கை ஆழ்வாரின் பாசுரச் சிறப்புகளை எளிய நடையில் " வைணவத்தின் விடிவெள்ளி திருமங்கை ஆழ்வார் " என தொகுத்தளித்துள்ளார் பெ. இராமநாதபிள்ளை.

பேராசிரியர் முனைவர் அ. அறிவொளி அவர்களின் " திருத்தாண்டக அருளிப்பாடுகள் " தொடரும், பேராசிரியர் சரசுவதி இராமநாதன் அவர்களின் கந்தரனுபூதித் தொடரும், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆன்மிக விடிவெள்ளி திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் நினைவலையாக, அவர் அர்ப்பணித்த

" கந்த புராண நுண் பொருள் " விளக்கத் தொடரும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

கொடிய வினைகள் தீர்த்தருளும் வேலப்பர் வீற்றிருக்கும் திருமலைக்கேணி திருத்தலச் சிறப்புகளும், பேரம்பாக்கம் சோளீஸ்வரரின் சிறப்புகளும், பாடல் பெற்ற சைவத் திருத்தலங்களுள் ஒன்றாக விளங்கும் திருவுசாத்தானம் என வழங்கப்பெறும் கோவிலூர் திருத்தலச் சிறப்புகளும், இவ்விதழில் திருத்தல உலாக்களாக வெளிவந்துள்ளன.

அனைவரும் இதழினைப் படித்து இன்பமுறுவோமாக.

அன்புள்ள,

(து. இராசேந்திரன், இ.ஆ.ப.)
ஆணையர் கூடுதல் பொறுப்பு

இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை–600 004.

திருக்குறள்

அதிகாரம்–82 பாடல்–814

"அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை"



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

வில்லவன் என்ற வீரன் தன் இல்லத்து வாயிற்புறம் நின்றிருந்தான். அப்போது எதிர்ப்படைகளின் போர்முரசு, அவன் நாட்டு எல்லையில் கேட்டது. அதற்கிடையே அவனது மன்னனின் அழைப்பும் கிட்டியது. 'நாட்டுக்குள் நுழையும் பகையை விரட்டிட வீட்டுக்கொரு வீரர் கிளம்பிடுக' என வேந்தன் அறிவித்தான். பிறந்த மண்ணைக் காப்பாற்ற என்றைக்கும் தயாராக இருக்க வேண்டும்; எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்பதுதானே வீரர்கட்கு இலக்கணம். அந்த இலக்கணத்தின் எடுத்துக்காட்டாக விளங்குகிறவனே வில்லவன்.

அவன், களம் புகுதற்கேற்ற உடைகளை அணிந்து கொண்டான். கவசம் பூண்டான். கூர்வேல், கேடயம், வாள் எனும் போர்க்கருவிகளை எடுத்துக் கொண்டான். தனது குதிரையின் மீது ஏறிக்கொண்டு, மன்னர் குறிப்பிட்ட இடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

எதிரிகளை வழியிலேயே மடக்கித் துரத்திடும் திட்டத்துடன் மன்னர், தனது படை வீரர்களைக் கோட்டை முகப்பில் அணிவகுத்து நிற்கச் செய்து, ஆணையிட்டதும் புறப்படுவதற்குத் தயாராக இருக்குமாறு பணித்தார்.

தலைநகரையும், தலைநகரைச் சுற்றிலுமுள்ள ஊர்களையும் சேர்ந்த வீரர்கள் ஒவ்வொருவராகக் குதிரையில் வந்து அந்தப் படைவரிசையில் இணைந்த வண்ணமிருந்தனர்.

வில்லவனும், குறித்த நேரத்தில் அந்தப் படை அணிவகுப்பில் போய்ச்சேரும் ஆர்வத்துடன் தன் குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தது நடக்கவில்லை. சற்றும் எதிர்பாராத வகையில் அவன் ஏறியிருந்த குதிரை, ஒரு துள்ளுத் துள்ளி, அங்குமிங்கும் ஆடி

அசைந்து, அவனைக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டது. கீழே விழுந்த வலியைவிட, குதிரை அவனைத் தள்ளிவிட்டு ஓடிய அதிர்ச்சியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. குதிரை இல்லாமலே ஓடிப்போய் அந்த அணிவகுப்பில் சேர்ந்து கொள்ளத் துடித்தான். காற்றினும் கடு வேகமாக ஓடினான்; தன் நாட்டுப் படை வீரர்களுடன் சேர்ந்து பிற நாட்டுப் பகையை வீழ்த்த!

இந்தக் காட்சியை வள்ளுவர் பார்த்துக்கொண்டே நின்றார். எவ்வளவு நம்பிக்கையுடனும், அன்புடனும் வளர்க்கப்பட்ட குதிரை, அவனுடன் எவ்வளவு பழகிய குதிரை. அந்தக் குதிரை அவனுக்கு முக்கியமான நேரத்தில் பயன்படாதது மட்டுமல்ல; அவனைக் கீழேயும் தள்ளி விட்டல்லவா போய்விட்டது.

அடடா! அந்த வீரன் தன் குதிரையின் செயலால் எவ்வளவு மனமொடிந்து போயிருப்பான். இவற்றையெல்லாம் எண்ணியது வள்ளுவரின் மனம். அந்தக் காட்சியை எதற்கு ஒப்பிடலாம் என்று சிந்தித்தார். "போர் வந்த நேரத்தில் களத்தில் தள்ளிவிட்டு ஓடிவிடும் குதிரையைப் போன்றவர்களின் நட்பைவிட ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருப்பதே சிறந்தது" என்ற அறிவுரைக்கான குறள் பிறந்தது. அதுதான் இது:

"அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை"

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்
குறளோவியம் நூலிலிருந்து
நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

இதழின் உள்ளே...

1. அருள்மிகு தென்முகக்கடவுள் 108 போற்றிகள் – 4
2. சொல்லுறுதிக்கோர் அப்பர் – பேராசிரியர் முனைவர்.ச.கணபதிராமன் – 6
3. பாடிக் களித்த ஆடிப்பூராள் தமிழாகரர் தெ.முருகசாமி – 10
4. திருமலைக்கேணி திருத்தலம் து.பாலதண்டாயுதம், எம்.ஏ., – 14
5. பேரம்பாக்கம் சோளீஸ்வரர் திருக்கோயில் பனையபுரம் அதியமான் – 17
6. நாகநாதசுவாமி திருக்கோயில் திருச்சிராப்பள்ளி மு.பூமிநாதன் – 20
7. பாரம்பரிய பாதுகாப்புப் பணியில் REACH நிறுவனம் – 23
8. வைணவத்தின் விடிவெள்ளி திருமங்கையாழ்வார் பெ.இராமநாதபிள்ளை – 25
9. திருத்தாண்டக அருளிப்பாடுகள் முனைவர். அ.அறிவொளி – 28
10. வேலும் மயிலும் துணை டாக்டர் சரசுவதி இராமநாதன் – 30
11 .பாவையும் கோவையும் திருவாவடுதுறை ஆதின சித்தாந்த பேராசிரியர் சித்தாந்த வித்யாநிதி சு.சண்முகவேல் – 32
12. கந்தபுராண நுண் பொருள் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் (நினைவலைகள்) – 35
13 திருவுசாத்தானம் எனும் கோவிலூர் திருக்கோயில் புலவர் ப.சிவகாமி – 37

அருள்மிகு தென்முகக்கடவுள்

108 போற்றிகள்

1. ஓம் அகரமுதல் அனைத்தும் ஆனாய் போற்றி
2. ஓம் அநாதியாம் முப்பொருள் காட்டினாய் போற்றி
3. ஓம் அநாதியே உற்ற தெய்வமே போற்றி
4. ஓம் அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
5. ஓம் அருளாய் நிறைந்த அமுதே போற்றி
6. ஓம் அருளே முதலாய் ஆனாய் போற்றி
7. ஓம் அலைபுனல் சூடிய அரனே போற்றி
8. ஓம் அல்லல் அறுக்கும் அறத்தாய் போற்றி
9. ஓம் அறம் முதல் நான்கும் அருளினாய் போற்றி
10. ஓம் அறிஞர்க் கறிவாய் நின்றாய் போற்றி
11. ஓம் அறிவின் உருவாய் அமர்ந்தாய் போற்றி
12. ஓம் அற்புதம் நிகழ்த்தும் அருளே போற்றி
13. ஓம் ஆகமம் ஆகி அண்ணிப்பாய் போற்றி
14. ஓம் ஆடாதே தெற்கில் அமர்ந்தாய் போற்றி

15. ஓம் ஆணையால் உலகை ஆள்வாய் போற்றி
16. ஓம் ஆதிபகவனாய் அமர்ந்தாய் போற்றி
17. ஓம் ஆதியாய் நின்ற அமலா போற்றி
18. ஓம் அறியா ணாகி அருளினை போற்றி
19. ஓம் ஆலின் கீழ் நால்வருக் கருளினை போற்றி
20. ஓம் ஆனந்த அருள்மழைக் கண்ணாய் போற்றி
21. ஓம் ஆன்மப் பொருளைத் துலக்கினாய் போற்றி
22. ஓம் இசையில் திளைத்த இசைவே போற்றி
23. ஓம் இடதுகால் ஊன்றிய ஏந்தலே போற்றி
24. ஓம் இருமையை நீக்கும் இடையே போற்றி
25. ஓம் இன்ப உருவின் எழிலாய் போற்றி
26. ஓம் உபதேசக் கலையின் ஒளியே போற்றி
27. ஓம் உயர்வுறு பரமகுருவே போற்றி
28. ஓம் உயிர்க்கெலாம் உயிராய் நின்றாய் போற்றி
29. ஓம் உருவெலாம் கடந்த ஒருவ போற்றி
30. ஓம் ஏகன் அனேகன் இறைவா போற்றி
31. ஓம் ஏகாந்த அனுபவம் இயற்றுவாய் போற்றி
32. ஓம் ஒளிமயமான உருவ போற்றி
33. ஓம் ஒன்றான ஆனந்த உருவே போற்றி
34. ஓம் ஓங்கார நாதத்து ஒருவ போற்றி
35. ஓம் ஓங்கு குருபர நாதனே போற்றி
36. ஓம் ஓங்குயிர் ஞான சிவமே போற்றி
37. ஓம் ஓம்எனும் பிரணவம் உணர்த்தினாய் போற்றி
38. ஓம் ஓம்பரப் பிரம்ம ஒளியே போற்றி
39. ஓம் ஔவியம் போக்கும் அருளே போற்றி
40. ஓம் கண்டிகை ஏந்தும் கரத்தாய் போற்றி
41. ஓம் கயிலைத் தென்திசைக் கடவுளே போற்றி
42. ஓம் கருணைக்கடலாய் நின்றாய் போற்றி
43. ஓம் கலையெலாம் புனைந்த கவினே போற்றி
44. ஓம் கல்லாடை புனைந்த கலையே போற்றி
45. ஓம் கல்லாலின் கீழமர் கடவுள் போற்றி
46. ஓம் சச்சிதானந்த சிவமே போற்றி
47. ஓம் சதாசிவத் தென்முகக் கடவுள் போற்றி
48. ஓம் சரியை முதல் நான்கும் தந்தாய் போற்றி
49. ஓம் சனகாதி நால்வருக் கருளினை போற்றி
50. ஓம் சித்தம் மருவும் செம்பொருளே போற்றி
51. ஓம் சித்தர்கட் கெல்லாம் சிற்குரு போற்றி
52. ஓம் சித்தி அருள் முத்திரையாய் போற்றி
53. ஓம் சித்திகள் பலவாய்த் திகழ்வாய் போற்றி
54. ஓம் சிந்தனைக் கரிய சிவமே போற்றி
55. ஓம் சிவஞானப் புத்தகம் ஏந்தினாய் போற்றி
56. ஓம் சிவயோக நிலையருள் செல்வா போற்றி
57. ஓம் சின்முத்திரை அருள் சிவனே போற்றி
58. ஓம் சுட்டு விரலாற் சுட்டுவோய் போற்றி
59. ஓம் சொற்பதம் கடந்த தொல்லோய் போற்றி
60. ஓம் ஞானத்து உறவை நல்குவாய் போற்றி
61. ஓம் ஞானத்தொரு தெய்வம் ஆனாய் போற்றி
62. ஓம் ஞானம் விளக்கும் நாயகா போற்றி
63. ஓம் தத்துவ விளக்கம் காட்டினாய் போற்றி
64. ஓம் தந்திர கலைதனைத் தந்தாய் போற்றி
65. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
66. ஓம் தவமெலாம் போற்றும் தவமே போற்றி
67. ஓம் தற்பதப் பொருளாய் நின்றாய் போற்றி
68. ஓம் திருநின்ற செம்மைச் செல்வா போற்றி
69. ஓம் தீரத் துறந்த திருவே போற்றி
70. ஓம் துரியம் கடந்த சுடரே போற்றி
71. ஓம் தூண்டா விளக்கின் சோதி போற்றி
72. ஓம் தூய நன்ஞானச் சுடரே போற்றி
73. ஓம் தெற்கமர் பரம பதியே போற்றி
74. ஓம் தேவர்கட் கெல்லாம் தேவனே போற்றி
75. ஓம் தூயனாய்த் துணையாய் நின்றாய் போற்றி
76. ஓம் நவயோக நந்தியாம் நாதா போற்றி
77. ஓம் நன்னெறி காட்டும் நாயகா போற்றி
78. ஓம் நாகப் புரியணி நாதா போற்றி
79. ஓம் நிலவை முடியில் நிகழ்த்தினாய் போற்றி
80. ஓம் நிறைவாய் நின்ற நிலையே போற்றி
81. ஓம் நிறைவுறு ஞானப் பொலிவே போற்றி
82. ஓம் நீறணி நெற்றிக் கண்ணாய் போற்றி
83. ஓம் பசுபதியாய் நின்ற பரம போற்றி
84. ஓம் பக்தி நெறிக்கோர் வித்தகா போற்றி
85. ஓம் பரஞானச் செஞ்சுடர் பரம போற்றி
86. ஓம் பரமபதி யெனும் பக்குவ போற்றி
87. ஓம் பரமானந்தப் பரமனே போற்றி
88. ஓம் பன்முக ஞானம் பரப்பினாய் போற்றி
89. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
90. ஓம் பெருவிரல் தத்துவம் பேசினாய் போற்றி
91. ஓம் பொய்த்தவப் போக்கைப் போக்குவாய் போற்றி
92. ஓம் மங்கலம் கருதும் சங்கரா போற்றி
93. ஓம் மந்திரக் கலையில் மகிழ்ந்தாய் போற்றி
94. ஓம் மலமாயை கன்மம் மாற்றினாய் போற்றி
95. ஓம் மறையெலாம் புகழும் மணியே போற்றி
96. ஓம் மனக்கவலை மாற்றும் மருந்தே போற்றி
97. ஓம் முதுமறை நான்காய் முகிழ்த்தாய் போற்றி
98. ஓம் மும்மலப் பேயை முனிவாய் போற்றி
99. ஓம் முயலகன்மேல் கால் ஊன்றினாய் போற்றி
100. ஓம் முனிவர்க்கே ஞானம் மொழிந்தாய் போற்றி
101. ஓம் மூன்று விரலை முகிழ்த்தாய் போற்றி
102. ஓம் மேதா தட்சிணா மூர்த்தியே போற்றி
103. ஓம் மோனத் திண்மொழி மலர்ந்தாய் போற்றி
104. ஓம் வலக்கால் மடித்து வைத்தவா போற்றி
105. ஓம் வன்பெலாம் தீர்க்கும் மருந்தே போற்றி
106. ஓம் வான்பொருள் வழங்கும் வள்ளலே போற்றி
107. ஓம் வீணை ஏந்தும் வித்தகா போற்றி
108. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

சொல்லுறுதிக்கோர் அப்பர்



திருஞான சம்பந்தர் காலத்தில் தோன்றிய திருநாவுக்கரசரின் சிவத்தொண்டும், தமிழ்த் தொண்டும் தெய்வத் திருப்புலவர்களால் இன்றும் போற்றப்பட்டு வருகின்றன. திருநாவுக்கரசரின் சொற்கள் உறுதிபயக்கும் சொற்கள் என்பதைப் பெரும் புலவர் ஒருவர் "வாக்கிற்கு அருணகிரி வாதவூரார் கனிவில், தாக்கிற்கு திருஞானசம்பந்தர்.. நோக்கிற்கு நக்கீரதேவர் நயத்துக்குச் சுந்தரனார், சொற்குறுதிக் கப்பரெனச் சொல்" என்று சிறப்பித்துள்ளார்.

பல்லவ மன்னன் மகேந்திரன் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர் முதற்கண் சமண சமயத்தைச் சார்ந்து பின்னர் சைவ சமயத்திற்கு வந்தார். சமண சமயத்தைச் சார்ந்த மகேந்திரவர்மன் சமணத் துறவிகளின் தூண்டுதலால் திருநாவுக்கரசரை அழைத்துவர ஆணையிட்டான். மன்னனின் அமைச்சர்கள், படை வீரர்கள் திருபாதிரிப்புலியூரிலிருந்து, திருவதிகை என்னும் ஊருக்கு வந்தனர். வந்தவர்கள் உழவாரத் தொண்டு செய்து கொண்டிருந்த திருநாவுக்கரசரை அணுகி "அரசன் தங்களை அழைத்து வர ஆணையிட்டுள்ளான்" என்று கூறினர். ஆனால், உறுதி கொண்ட நெஞ்சம் கொண்ட திருநாவுக்கரசர்.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடப் படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லா தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியினையே குறுகினோமே."

என்று உறதியுடன் கூறினார். "யான் யாருக்கும் குடிமகன் அல்ல. கூற்றுக்கும் அஞ்சேன் நீங்கள் துன்பத்திற்குள் ஆட்படுத்தினாலும் அதற்கும் அஞ்சேன். யாம் யாருக்கும் பணிய மாட்டோம். பணியாமல் பணி செய்வதே எமக்கு இன்பம். இறைவன் ஒருவனுக்கு யாம் பணி செய்து பேறு பெறுவோம்". என்று உறுதிபட கூறினார்.

அரசனது ஆணையை ஏற்று அழைக்க வந்த அமைச்சனிடம் திருநாவுக்கரசர் இவ்வாறு கூறியது அவரது உறுதி கொண்ட நெஞ்சைக் காட்டுகிறது.

"மன்னனையே உயிர் எனக் கருதும்" அந் நாளில் மன்னனது ஆணையை ஏற்க மறுத்த நாவுக்கரசரின் துறவி நெஞ்சம் வேந்தனையும் துரும்பாக மதிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஒரு துறவி மன்னனது ஆணைக்குப் பணிய மறுத்தார் என்ற வரலாறு உலகில் வேறு எங்கும் கிடையாது. நாவுக்கரசரே அந்த வரலாற்றைப் படைத்தார்.

அமைச்சர்கள் தாங்கள் வரவில்லையென்றால் எங்கள் தலை தரையில் உருளும் என்று கூறிட நாவுக்கரசர் அவர்களோடு மகேந்திர மன்னன் அவைக்கு சென்றார்.



மன்னனது அவைக் கூடியது. சைவ சமயத்திற்கு மாறிய திருநாவுக்கரசருக்கு தண்டனைக் கொடுக்கப் பட வேண்டும் என்று சமணர்கள் கூறிட மன்னன் நாவுக்கரசரை நீற்றறையில் வைத்து

பேராசிரியர் முனைவர் ச.கணபதிராமன்

நீற்றுங்கள் என்றான். உறுதிக்கொண்ட திருநாவுக்கரசர் நீற்றறையில் வைக்கப்பட்டார். இறைவன் அருளால், பிழைத்தார். யானையைக் கொண்டு இடறச் செய்தார்கள். யானையும் பணிந்தது. நஞ்சுக் கலந்த அமுதைக் கொடுத்தார்கள். அது அமிழ்தமாகியது. கல்லைக் கட்டி கடலில் வீசினார்கள். உறுதி கொண்ட திருநாவுக்கரசருக்கு கல் தெப்பமாக மிதந்து கரையேறியது.

கரையேறிய திருநாவுக்கரசரைக் கண்ட மன்னன், "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற மந்திரத்தை ஏற்று சமண சமயத்தை விடுத்து சைவ சமயத்தைச் சார்ந்தான்.

நாவுக்கரசர் தலயாத்திரைத் தொடங்கினார். திருக்கோயில்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவினார்.

திருதூங்கானை மாடம் என்ற தலத்திற்கு வந்தார். சமண சமயத்தில் இருந்த எனக்கு "இறைவா நீ என் தோள் மீது சூலக்குறியை இட்டு ஆட்கொள்ள வேண்டும்" என்று உறுதிப்பட வேண்டினார்.

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெயும்
என்னாவி காப்பதற்கிச்சை யுண்டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி
மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் துங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே"

—என்றார்.

இறைவன் தந்த சூல அடையாளத்தைப் பெற்று மீண்டும் பயணத்தைத் தொடங்கினார் நாவுக்கரசர்.

சோழ வள நாட்டில் சீர்காழிப் பதியில் சம்பந்தரை சந்தித்து அவரோடு உரையாடி பின்னர் பல தலங்களுக்கும் சென்று திருசக்தி முற்றம் என்ற திருப்பதியை அடைந்தார். "இறைவா உன்னுடைய திருவடி பிறவி பிணியை அறுக்கும் திருவடி, உன் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொண்டு பிறவியாகிய கடலைக் கடக்க முடியும். ஆகவே உன் திருவடியை என் தலைமீது சூட்டுவாய்" என்று வேண்டினார். இறைவன் "நல்லூருக்கு வா" என ஆணையிட நாவுக்கரசர் நல்லூருக்குச் சென்றார். திருநல்லூரில் இறைவன், திருவடியை அப்பர் அடிகளின் திருமுடி மீது சூட்டியருளினார்.

இறைவனது திருவடியை தலைமேல் தாங்கிய நாவுக்கரசர் திருவீழிமிழலை என்னும் பதியினை அடைந்தார். அவ்வூரில் அப்போது மக்கள் பஞ்சத்தால் தவித்தனர். மழைபொழிந்து பல ஆண்டுகள் ஆகி விட்டதால் விளைப்பொருள்கள் விளையவில்லை.

இதனால் ஊர் மக்கள் உணவின்றி உள்ளம் நொந்து வாழ்ந்தனர். இவர்களது நிலையை நாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் கண்டனர். நாட்டு மக்களின் துன்பத்தினைப் போக்கிட வேண்டும் என்று வேண்டினர். இறைவன், திருக்கோயிலுக்கு கிழக்கு வாயிலிலும் மேற்கு வாயிலிலும் படிக்காசு இருக்கும். மேற்கு வாயிலில் நாவுக்கரசும். கிழக்கு வாயிலில் உள்ள காசை திருஞான சம்பந்தரும் எடுத்து மக்களிடம் கொடுத்து பொருள்களை பெற்று உண்ணச் செய்யுங்கள்" என்று அருள் பாலித்தான். அவ்வண்ணமே அவர்கள் செய்தார்கள். திருநாவுக்கரசர் பெற்ற காசுக்கு பொருள்கள் விரைவாக கிடைத்தன. அதனால் உணவு விரைவாக ஆக்கப்பட்டு மக்கள் காலத்தே உண்டனர். ஞான சம்பந்தர் பெற்ற காசு சிறிது மாற்று குறைந்ததால் பொருட்கள் வாங்கவும் உணவு ஆக்கவும் காலதாமதம் ஆயிற்று.

இதற்கு காரணத்தை சேக்கிழார் பெருமான் "கையில் உழவாரப்படையை வைத்துக் கொண்டு திருப்பணிகள் செய்து நாவுக்கரசர் உழைப்பதால் அவர் பெற்ற காசு வாசியில்லா காசு" என்று குறிப்பிடுகிறார். இதன் கருத்து என்னவெனில் உழைப்பிற்கும் திருப்பணிக்கும் முன்னுரிமை கொடுத்து மக்களை இறைவன் உழைக்க ஆட்படுத்துகிறான், என்பதாகும்.

உண்ணா விரதப் போர்

திருவீழிமிழலையில் பஞ்சத்தைப் போக்கியப் பின்னர் திருநாவுக்கரசர் பழையாறை என்ற திருத்தலத்தை அடைந்தார். அத்திருத்தலத்திற்குச் செல்லுகின்ற போது அவரது கைகள் அவரையறியாமல் குவிந்தன. அருகில் சென்ற அடியார்கள் இது சமணர்கள் கோயிலாயிற்றே என்று கூறினர். வேறு சிலர் சிவன் கோயிலை சமணர்கள் மறைத்து சமண பள்ளியாக்கிவிட்டனர் என்றனர். உறுதிக் கொண்ட திருநாவுக்கரசர் "இறைவா உன்னுடைய் வண்ணத்தைக் கண்டு வணங்கினாலன்றி போகேன்" என்று உண்ணா நோன்புப் போர் தொடுத்தார். நாவுக்கரசர் உண்ணா நோன்பு

மேற்கொள்ள அடியார்களும் உண்ணா நோன்பு மேற்கொண்டனர். இச்செய்தி அரசனுக்கெட்டியது. அரசன் விரைந்தோடி வந்தான். தக்கவர்களைக் கொண்டு ஆய்வு செய்து பார்க்கும்போது அது சிவன் கோயிலே என்று தெளிந்தான். அலுவலர்களுக்கு ஆணையிட்டு சிவன் கோயிலை வழிப்பாட்டிற்கு உரியதாக்கினான். உறுதிக் கொண்ட நாவுக்கரசரின் உண்ணா நோன்புப் போர் வெற்றியும் பெற்றது. கொள்கைக்காக உண்ணாவிரதப் போரை முதன் முதலில் தொடங்கியவர் நாவுக்கரசரே எனலாம்.

கயிலை யாத்திரை

பல திருத்தலங்களுக்கும் சென்று வந்த திருநாவுக்கரசர் கயிலைக்குச் சென்று கயிலை நாதனின் திருக்காட்சியைக் கண்டு வணங்கி வர, விழைந்து கயிலைக்குச் சென்றார். பல நாடுகளையும், மலைகளையும், ஆறுகளையும், நடந்து, கடந்து, தவழ்ந்து கயிலைக்குச் சென்றார். பின்னர்த் தவழவும் ஆற்றல் அற்று ஒடுங்கி கிடந்த நாவுக்கரசர் முன்பு மரவுரி தரித்து சடைமுடி தவழத் துறவி கோலத்தில் இறைவன் தோன்றி "இந்நிலையில் எங்கு செல்கிறீர்" என்று கேட்க, "கயிலை நாதனை கண்டு தொழ செல்கிறேன்" என நாவுக்கரசர் கூற,

"கயிலை நாதனை கண்டு தொழுவது அரிது" என்று கூற, நாவுக்கரசர் "என்னை ஆளும் நாயகன் கயிலையில் இருக்கும் வண்ணத்தைக் கண்டாலல்லது இந்த உடல் மீளாது" என்று உறுதிபட கூறினார். திருநாவுக்கரசரின் உறுதியை கண்ட இறைவன் "ஓங்கு நாவினுக்கு அரசனே நீ எழுந்திரு" என்று கூறி தனது காட்சியைக் காண்பாய். இப்பொய்கையில் மூழ்கிடு" என்றார். திருநாவுக்கரசர் பொய்கையில் மூழ்கி திருவையாற்றை அடைந்து, அங்குக் காண்பதற்கரிய கயிலைக் காட்சியினைக் கண்டார். இந்த நிலை திருநாவுக்கரசரின் உறுதியான நிலையை புலப்படுத்துகிறது.

நிறைவு வாழ்க்கை

நாவுக்கரசர் எண்பது வயது பருவத்தை அடைந்து விட்டார். உடல் தளர்ந்தது. நடுக்கம் ஏற்பட்டது. ஐந்து புலன்களும் செயல்படாமலிருக்கத் தொடங்கிவிட்டன. இந்நிலையில் திருப்புகலூரை அடைந்தார், திருநாவுக்கரசர். "இறைவா ஆற்றலும் ஐம்புலன்களும் செயல் இழந்து விட்டன. உன்னுடைய திருவடியை அடைந்திட எண்ணுகிறேன். இரக்கம் கொண்டிடு" என்று கசிந்து வேண்டினார். இறைவன் இவரது உறுதியை சோதிக்க மண் ஆசை, பொன்னாசை, பெண்ஆசை ஆகியவற்றை காட்டிட, அவற்றை இவர் சிறிதும் பொருட்படுத்தாமல் உள்ளம் சோராது, உடல் சோர்ந்து ஒடுங்கினார், உறுதியான உள்ளம் படைத்த நாவுக்கரசர்.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுலே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போதுணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்று பாடி உமையயொருபாகன் திருவடி நீழலை எய்தினார்.

நாவுக்கரசரின் பதிகங்களில் உறுதி மிக்க ஆனால் கனிவு கொண்ட சொற்களைக் காண முடியும்.

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாட்டினை வெறுத்து ஒதுக்கியவர் நாவுக்கரசர். சாத்திரம் பேசிடும் சழக்கர்களை காய்பவர் அவர்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியன் திருவடியை மறவேன் என்ற கொள்கையில் உறுதியுடையவர்.

செழுஞ்சோதியான சிவப்பரம்

பொருளைப்பாடுவதோடமையாது,

"முக்கரை போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்த முதல்வா
போற்றி என்றும், "நஞ்செந்தில் மேய
மணாளனுக்குத் தந்தை" என்றும்,
"கோழிக் கொடியோன் தாதை போலும்"

என்றும் சமயப் பொதுமையோடு முருகனையும் பாடியுள்ளார்.

பற்றறுத்தார் தம்மைப் பணிந்து பணி செய்த நாவுக்கரசர்.

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே"

என்ற கோட்பாட்டில் ஊன்றி நின்ற பெருந்தகையார்.

ENJOY POURNAMI & PRADOSAM AT KAILASH MANASAROVER

திருக்கயிலாயம்–மானஸரோவர்–முக்திநாத்

18–ம் ஆண்டு புனித யாத்திரை புறப்படும் மாதங்கள்

ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர்–2007

காட்மாண்டிலிருந்து 4500 மாடல் டயோட்டா காரில் சூப்பர் டீலக்ஸ் வசதியுடன் திருக்கயிலாயம், மானஸரோவர் சென்று தரிசித்து பின் காட்மாண்ட் வருவதற்கு 16 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட ரூ.55,004–/ மட்டுமே.

திருக்கயிலை பயணத்தின் போது நந்தி, மானஸரோவர், திருக்கயிலை வலம் வருதல் ஆத்மலிங்க தரிசனம், அஷ்டபத் தரிசனம், தீர்த்தபுரி தரிசனம் உள் (INNER) பரிக்கிரமா, சப்தரிஷிகள் குகை தரிசனம் ஏற்பாடு செய்து தரப்படும்.

முத்திநாத், தாமோதிரகுண்ட், நேப்பாள், சித்துவான், போக்ரா சுற்றுலா மலை விமானம் ஜனக்புரி, நாகர்கோட், மனக்கமனா தேவி தரிசனம் ஏற்பாடு செய்து தரப்படும்.

(குழுவாக வருபவர்களுக்கு சிறப்பு சலுகை உண்டு) Special care for senior Citizens

ஜோதி, அதிகாரி (எக்கோ டிரக் இன்டர்நேசனல்) தாமல், காட்மாண்டு, நேப்பாள், செல்: 00977–98512020061

மனோகர் டிராவல்ஸ்

2/176 பெரியண்ண வீதி, ஈரோடு–638001.
போன்: 2269940 செல்: 94433 80159

கைலாஷ் டிராவல்ஸ்

பெரியமேட், சென்னை–600 003.
போன்: 42053923 செல்: 94433 80154

பெங்களூர்–கயிலைமணி ரவிக்குமார்
போன்: 22879745
மதுரை–சிவ பிரிண்டெக்மணி
செல்–94435 19314
திருநெல்வேலி–கயிலை ஆறுமுகம்
செல்: 99940 27188
ஹைதராபாத்–சிவத்திரு சீனிவாசன்
செல்: 09989242299

புத்தக மதிப்புரை

பாடல் பெற்ற சைவத் திருத்தலங்களுக்குச் செல்லும் வழி, அத்திருத் தலங்களின் சுருக்க வரலாறு, திருக்கோயில்கள் வழிபாட்டிற்கு திறந்திருக்கும் நேரம், பொறுப்பாளர்கள் முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகிய வற்றைத் தொகுத்து 'பாடல் பெற்ற ஸ்தலங்கள்' எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார் திரு.சாய்குமார் அவர்கள். இந்நூல் இத்திருத் தலங்களுக்குச் செல்லும் ஆன்மிகப் பெருமக்களுக்கு நல்லதொரு வழி காட்டி நூலாக அமைந்துள்ளது.

நூல் கிடைக்குமிடம் :
கே.சாய்குமார், 16, (பழைய எண். 28)
இரண்டாவது மெயின் ரோடு, ஜெய் நகர்,
அரும்பாக்கம், சென்னை–600 106
(மொபைல் எண் : 9382872358)

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ.10/–
ஓராண்டுச் சந்தா	ரூ.120/–
ஐந்தாண்டுச் சந்தா	ரூ.500/–
பத்து ஆண்டுச் சந்தா	ரூ.1000/–
ஆயுட்காலச் சந்தா	ரூ.1500/–

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

'திருக்கோயில்' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டண விபரம்

1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) ரூ.15,000/–
2. முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ.10,000/–
3. பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) ரூ.7,500/–
4. உட்புறம் முழுப்பக்கம் ரூ.5,000/–
5. உட்புறம் அரைப்பக்கம் ரூ.3,000/–

இதற்கான பணவிடை/வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை–600004 என்ற முகவரிக்கு அனுப்பவும்.



பாடிக்களித்த ஆடிப்பூராள்

பருகும் நீராக, தின்னும் வெற்றிலையாகக் கண்ணனைக் கிருஷ்ணானுபவமாக முழுக்க முழுக்க அனுபவித்தவர்கள் ஆழ்வார்கள் ஆவர். அவர்களுள் நாச்சியார் என்னும் நற்றமிழ் நங்கையாம் ஆண்டாள், கண்ணனை அனுபவித்த விதமே அலாதியானது. மற்றவர்கள் மேல் மடையாக இருந்து அனுபவித்தவர்கள். ஆண்டாளோ கீழ்மடையாக இருந்து அனுபவித்தவள். நிலத்துநீர் மேட்டு நிலத்திற்குப் பாய்ச்ச முயற்சி தேவை. மேட்டு நில நீர் கீழ்நிலத்தில் இயல்பாகப் பாய்ந்து விடும். எனவே ஆண்டாளின் கிருஷ்ணானுபவம் தனியானது; சுவையானது.

ஆண்டாளுக்கு நினைவெல்லாம் கண்ணனே. நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் கண்ணனே அவள் கண்ணுக்குக் கதியாகத் தென்பட்டதால் அவனை அனுபவிக்கத் துடிக்கும் துடிப்பு நாளுக்குநாள் அதிகரித்தது. அந்த அனுபவப் பரிமாணங்களை எழுத்தாக வெளிப்படுத்திக் காட்டியதுதான் அவள்பாடிய பதினான்கு திருமொழிகள்.

கண்ணனைக் காட்சிப் பொருளாகவே என்றும் கண்டு களிப்பவள் ஆண்டாள். அந்தக் களிப்பிலேயே தன்னை மறந்து மயங்குகிறாள். களித்துப் பழகும் காதல் மயக்கத்தின் அரைகுறையில் அருகிருக்கும் தோழியரிடம் கண்ணனின் தோற்றப் பொலிவிலேயே ஆழ்ந்து உழன்று கொண்டிருக்கும் தன்னை, “வேகும் புண்ணில் புளிகரைத்த நீரை ஊற்றி மேலும் எரிச்சலை ஊட்டுவதுபோல் கேள்வி மேல் கேள்விகேட்டுத் துன்புறுத்தாதீர்” என வேண்டுகிறாள். “வேண்டுமானால் உபத்தரவம் செய்யாமல் முடியுமானால் உதவப்பாருங்கள்” எனக் கெஞ்சுகிறாள். பெண்ணாகிய தான்படும் துன்பத்தை அறியாத ஆணாகிய கண்ணனிடம் போய் அவனது இடுப்பில் உள்ள பட்டுப் பீதாம்பரத்துணியைக் கேட்டு வாங்கி வந்து தன் மீது போர்த்துங்கள் என ஆண்டாள் தன் தோழியரை உதவ வேண்டுவது தெய்வீகக் காதலின் உச்சத்தைக் காட்டுகிறது.

கண்ணன் என்னும் கருந்தெய்வம்
காட்சிப் பழகிக் கிடப்பேனை,
புண்ணில் புளிப்பெய்தால் போலப்
புறநின்று அழகு பேசாதே,
பெண்ணின் வருத்தம் அறியாத
பெருமான் அறையில் பீதக
வண்ண ஆடைகொண் டென்னை
வாட்டம் தணிய வீசீரே!

இப்பாடலில் காணும் “பழகிக் கிடப்பேனை” என்ற சொற்கள் கண்ணனைக் கண்டு கண்டுகளித்த கிருஷ்ணானுபவத்தின் உச்சத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த உச்சத்தினும் உச்சமாக உள்ளதையும் ஆண்டாள் பதிவு செய்துள்ளாள்.

பட்டி மேய்ந்தோர் காரேறு பலதேவர்க்கு ஓர்கீழ்க் கன்றாய்
இட்டீ றிட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே?
இட்ட மான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி
விட்டுக் கொண்டு விளையாட விருந்தா வனத்தே கண்டோமே!

வினா விடைப் பாடலாக அமைந்த இதில் கண்ணனை அடையத் துடிக்கும் ஆண்டாளின் ஆராக்காதல் வெளிப்படுகிறது. அது தான், ஆன்மா ஆண்டவனைப் படிப்படியாக அடையத் துடிக்கும் முயற்சியாகும்.

பலராமனின் தம்பி கண்ணன். அவன் மேகம் போல் கருத்தவன், என்றாலும்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆனழகன், பயமறியாத இளங்கன்றாகத் துள்ளித் திரியும் பருவத்தினன், தன்குல மரபின்படி ஆநிரைகளை மேய்க்கும் இன்பச் செருக்கோடு எங்கும் சுதந்திரமாகச் சுற்றித் திரிபவன். அப்படிப்பட்ட வனை இங்கே வரக் கண்டீர்களா என ஆயர் பாடித் தோழியர்களிடம் கேட்கிறாள் ஆண்டாள். ஆயர்பாடிப் பெண்கள் ஆண்டாளின் மன நிலையை நன்குணர்ந்தவர்கள்.

அதற்கேற்பவே "கட்டுப்பாடின்றித் திரியும் மேய்ச்சல்மிக்க ஆநிரை களைத் தன் விருப்பப்படி அங்கும் இங்கும் மேய விட்டுத் தக்க இடத்தில் அவைகளுக்கு நீரூட்டித் திரிந்தவனை இந்தப் பிருந்தாவனத்தில் கண்டோமே" என்று விடை பகர்ந்தார்கள்.

ஆயர்பாடிப் பெண்கள் சொன்ன விடை ஆண்டாளுக்குப் புதுஅச்சத்தை உண்டாக்கி விட்டது. தான் காணத் துடித்த கண்ணனை ஆயர் பாடியர் கண்டு விட்டனரே என்ற ஏக்கம் ஆண்டாளை மருட்டியது. கண்ணனைப் பார்ப்பதால் பயனடையப்போவது தானாக இருக்க, பயனடையப் போகாதவர்கள் கண்ணனைப் பார்த்துவிட்டனரே என்ற உணர்வுதான் ஆண்டாளின் ஏக்கத்தை இரட்டிப்பாக்கிவிட்டது.

இதில் கேள்வி கேட்டதும் விடை பகர்ந்ததும் ஆண்டாள்தான் என்றாலும் அவனை அடைய முடியாத ஏக்கத்தின் மூலம் அனுபவித்த அனுபவந்தான் கிருஷ்ணானுபவத்தின் புதுப்பரிமாணம் எனலாம்.

இப்படியாக உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கண்ணனை அனுபவித்துப் பழகிய ஆண்டாள், "மானுடவர்க் கென்று பேச்சுப் படில் வாழ்கில்லேன்" என்ற தெய்வீகக் காதலையே நினைத்தபடி உறங்கும் உறக்கத்தில் ஏற்பட்ட கனவில் அனுபவித்த கிருஷ்ணானுபவத்தை 'வாரணம் ஆயிரம் சூழவலம் செய்து' என்ற ஆண்டாளின் பாசுரங்களால் நாமும் ஓரளவு அனுபவிப்போமாக!

ஆழ்மனத்தின் அடித்தளத்தில் புதையுண்டு கிடப்பவை நினைவு அலைகளாக வெளிப்பட்டே தீரும். அந்த வெளிப்பாட்டைக் கனவு என்பர். அடைக்கப்பட்ட கதவு திறந்ததும் வீறிட்டெழும் காற்றைப்போல அடிமனத்தில் அடைபட்டுக் கிடக்கும் எண்ணங்களின் வடிகாலாகவே கனவு பரிணமிக்கிறது. இந்த அடிப்படையில் கிருஷ்ண லீலையோடே உறங்கும் ஆண்டாள், நனவில் கண்ணனின் கரம் பிடிப்பதுபோலக் கனவு காணுகின்றாள். கன்னிகண்ட அக்கனவுக் காட்சி "நனவில் ஆண்டாள் கண்ணனை மணந்தால் எப்படியிருக்குமோ அப்படியாக நினைத்துக்கொள்ளும்படி இருந்தது" என்பதுதான் ஆண்டாள் உணர்த்திய கிருஷ்ணானுபவத்தின் புதுப்பரிமாணம்.

கனவு கண்டதைத் தாமாக மட்டும் உள்ளத்துக்குள் நினைந்து நினைந்து அனுபவிக்காமல் தோழியரிடம் "கனாக் கண்டேன் தோழிநான்" என ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படையாக உரைப்பதன் மூலம் ஆண்டாளின் மனதில் பழுத்த காதலின் அழுத்தம் வெளிப்படுகிறது என்பதையே பொதுவாகத் திவ்வியப்பிரபந்தத்தின் கிருஷ்ணானுவபம் எனலாம்.

கன்னியின் கனவு தொடங்குகிறது. ஆண்களில் சிறந்தவனாகிய நாராயணன் ஆயிரம் யானைகள் சூழ்ந்து வரக் கம்பீர நடையோடு நகர் வலம் வருகிறான். அவன்தான் தன் வாழ்வின் நம்பிக்கைக்குரியவன் என்பதால் அவனை "நாராயணன் நம்பி" என மணக்கோல வார்த்தையால் அழைத்தாள் மணநங்கை ஆண்டாள். அவளின் நம்பிக்கையின் உறுதிப்பாட்டிற்கான குறியீடாகவே பலம்மிக்க தும்பிக்கையுடைய யானைகளின் நடுவில் நகர் வலம் வருவதைக் கனவு காண்கிறாள் அவள்.

வாரண மாயிரம் சூழ வலஞ்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றுஎதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்



திருமண நாளை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு நடக்கும் திருமணத்தின் போதுதான் மாப்பிள்ளை அழைப்பான ஊர்வலம் நடக்கும். ஆனால் இது கன்னியின் கனவுத் திருமணம் என்பதால் மாப்பிள்ளை அழைப்பான ஊர்வலம் முந்திக்கொண்டு விட்டது. திருமண நாளின் உறுதிப்பாடு பிந்தி விட்டது. இந்தத் தலைகீழ்மாற்றம் கனவால் மட்டும் வந்ததன்று, நாராயணன் எப்போதும் ஆண்டாளின் உள்ளத்திலேயே உலாவந்து கொண்டிருப்பதால் அதன்வெளிப்பாடாக மாப்பிள்ளை அழைப்பு முந்திவிட்டது.

மாப்பிள்ளை அழைப்பான ஊர்வலம் முந்திக்கொண்டதைப்போல உறுதிப்படுத்த வேண்டிய மணநாளும் "நாளை வதுவை மணம்" என்று விரைந்து

முந்துகிறது. இது கனவுத் திருமணந்தான் என்றாலும் இராமனுக்கு முடிசூட்ட நினைத்த தசரதன் நினைத்த மறுநாள்போல் அவசரமாகத் தேர்ந்தெடுத்துத் துன்பப்பட்ட நாளாக இல்லாமல் மணமகன் நகர்வலம் வந்துவிட்ட உறுதிப்பாட்டில் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கையின் நிச்சயத்தால் “நாளை வதுவை” எனக் குறிக்கப்பட்டது.

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பான்ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்

மணவிழா தொடங்கிவிட்டது. ஊரே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறது. அதற்கேற்ப மணவிழா நடக்கும் இல்லத்தில் பூரணகும்பங்கள், தென்னம்பாளை, கமுகு போன்ற தோரணங்கள் மிளிர்கின்றன. அழகு கொழிக்கும் அந்த அலங்கார மிதப்பில் மிதக்கும் மணவறையில் நகர்வலம் வந்த மணாளனாகிய கண்ணன் எழுந்தருளுவதைக் கண்ணாரக் காண்கிறாள் ஆண்டாள். அவனை நரசிம்மன், மாதவன், கோவிந்தன், எனப் பலரும் பலவாறு பேரிட்டழைப்பதை அறிந்திருந்ததால் அப்பெயர்களையெல்லாம் ஒவ்வொன்றாகத் திருப்பித் திருப்பிச் சொல்லிச் சொல்லி மகிழ்கிறாள்.

இப்படிப் பேர் சொல்லிச் சுகங்காணும் பேதைக்குத் திருமணம், சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படாமல் ஆண்டாளின் இல்லத்திலேயே நிச்சயிக்கப்படுகிறது. தேவலோகத்தில் உள்ளவர்களெல்லாம் வந்து கூடிவிட்டார்கள். இப்போது தேவலோகம் ஆகிவிட்டது ஆண்டாள் இல்லம். அதனால் அவளின் நாத்தனாராகிய துர்க்கை ஆண்டாளுக்கு மணமாலை சூட்டியதோடு திருமணப்பட்டுடுத்தி அழகு பார்த்தாள்.

இந்திர னுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்திரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ நான்

இந்தப் பரப்பரப்பான சூழலில் மணச்சடங்கும் தொடர்ந்து விட்டது. மறை வல்லவர்களால் தொடர்ந்து மணச்சடங்கின் தொடக்கமாக நாலாப் பக்கங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்ட புனிதநீர் சொரியப்பட்ட குடங்களால் மணமக்கள் நீராட்டப்பட்டனர். பின்னர் மணமகளாம் ஆண்டாளை மணமகனாம் கண்ணனுடன் இணையாக அமர்த்திக் கங்கணம் கட்டினார்கள். இந்த இருவரையும் இப்படியாக இணைத்துப் பார்ப்பது எனக் கங்கணம் கட்டிய நினைப்போடே இருந்தவர்கள் இருவரையும் இணைத்துக் காப்புக் கட்டியதில் பேரானந்தம் உற்றனர்.

நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனி நல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தேத்தி
பூப்புனைக் கண்ணிப் புனிதனோடு என்தன்னை
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்

காப்புக் கட்டிக் கொண்டதும் மங்கலநாண் பூட்டி ஆண்டாளாம் மங்கையை ஆளத் தயாராகி விட்டான் மதுராபுரியை ஆளும் மன்னனாம் கண்ணன். நகர் வலமாக ஆயிரம் யானையுடன் வந்தவன் இப்போது தன்னந்தனியனாய் மணமேடைக்கு அழைக்கப்பட்டான். அழகான இளம் பெண்கள் ஒளிவீசும் தீபங்களையும் பொற்கலசங்குகளையும் ஏந்தியவராய் மாப்பிள்ளையை வரவேற்கிறார்கள். அன்று சீதையை மணக்க வேண்டி சனகன் வீட்டில் வைக்கப்பட்டிருந்த வில்லை முறிக்க இராமன் பூமி அதிரும்படியாகச் சென்ற அதே வேகம்போலக் காதல் ஆவேசத்தால் முத்துக்களால் அலங்கரிப்பட்ட மணப் பந்தலுக்குள் எழுந்தருளிவிட்டான் கண்ணன்.

கதிரொளி தீபம் கலசமுட னேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலைதொட் டெங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்

அவ்வளவுதான், எங்கும் மணவிழாப் பரபரப்பு ஏற்பட்டு விட்டதன் அடையாளமாக மத்தளம் முழுங்கிற்று. மணச்சங்கான வலம்புரிகள் அதிர்ந்தன. ஒய்யாரமாக எழுந்த இந்த ஓசை ஒலிகளுக்கிடையே மைத்துனனாம் மதுசூதனன் ஆண்டாளின் கைகளைப் பற்றி விட்டான். வைகுந்தமே தன் கைக்குள் வந்து விட்டதான நினைப்பில் குதூகலித்தாள் ஆண்டாள்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து

கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன்
தோழீ! நான்

சூரியக் கதிர்கள் பட்டதும் மலரும் தாமரை போல் மலர்ந்த மணமகளின் கரங்களைப் பற்றிய மணமகன், பற்றிய கையைவிட மனமில்லாமல் இறுகப்பற்றிக் கொண்டான்.

வேத விற்பன்னர்கள் வாழ்த்து கூறினார்கள். அவர்களால் பரப்பப்பட்ட தர்ப்பைப் புல் தரையில் செய்த மணச் சடங்கு வேள்விக்குண்டத்தை ஆண்டாளைப் பற்றிய பாசத்தோடு மணமகளுடன இணைந்தே வலம் வந்தான் கண்ணன். இது கனவில் வந்த வலந்தான் என்றாலும் "என்றைக் கும் ஏழேழ் பிறப்பிற்கும், உற்றோமே யாவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்று ஆண்டாள் முன்பு தன்முன் சொன்ன வாசகத்தின் பொருளை மறவாதவனாய்க் கண்ணன் இப்போது அதனை ஆண்டாளுக்கே திருப்பிச் சமர்ப்பணம் செய்வான்போல மனதிற்குள் கிளுகிளுத்தபடி ஆண்டாளின் கையைப் பற்று விடாமல் பற்றியவனாய்த் தீவலம் வந்தான் எனும்படியாக இருந்தது அக்காட்சி.

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து
காய்சின மாக களிறன்னான் என்கைப்பற்றி
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்

தீவலம் வந்தபோது நடந்த அற்புதத்தை எண்ணிஎண்ணி அசைபோடுவதுபோல் ஒரு நிகழ்ச்சி கனவில் நடக்கிறது. அதுதான், யாருக்கும் குனியாத நெடுமாலாக உலகளந்த உத்தமனாய் நீண்ட உருவெடுத்தவன் குனிந்து மணமகளின் காலைக் கைகளால் பற்றி அம்மிமீது எடுத்த வைத்த மதுசூதனனின் அருங்காட்சிக்கு ஈடு இணையில்லை எனலாம்.

ஏனெனில் இவன் கால்பட்டால் கல்லும் பெண்ணாகும் அற்புதம் செய்யும் ஆற்றல் பெற்றவன் தான் என்றாலும் மணப்பெண்ணின் காலைப்பிடித்து அம்மிக் கல்லில் வைத்தான் என்றது". கையைப் பிடிப்பவன் காலும் பிடிப்பான் போலும்" என்ற மகிழ்ச்சி யான ஏச்சுக்கு ஆளாகி விட்டதுதான் கண்ணனின் தலைகீழ் மாற்றமான அற்புதம் ஆகும்.

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தான்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ! நான்

இப்படி மெல்லிய பூங்கொடியான ஆண்டாளின் கையையும் காலையும் பற்றிய சிங்கஏறாக நடந்த கண்ணனின் கைக்குப் பரிசு தருவார்போல ஆண்டாளின் சகோதரர்கள் உடன்பிறந்தவளின் கையை மாப்பிள்ளையின் கையோடு சேர்த்துப் பொரியள்ளிப் போட்டு மணவிழாவை முடித்து வைத்தார்கள் தம்பதியர் இருவரும்;

ஒரே காதல் பாட்டுப் பாடும் இரண்டுள்ளங்கள்
சரேலெனத் தழுவக் கண்டோம் தங்கத்து
மணவறையில்

என்ற பாவேந்தரின் தொடருக்கேற்பக் காட்சியளித்தார்கள். மணப்பொடி பூசிக் கொண்டு யானை மீதேறி நகர்வலம் வந்தார்கள்.

வரிசிலை வான்முகத்து என்னைமார்தாம் வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னேநிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைமேல்என் கைவைத்து
பொரிமுகந் தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்

முன்பு கண்ணனை மட்டும் நகர்வலத்தில் கண்ட நகரத்தார்கள் இப்போது மணமகளோடு ஒருசேர யானைமீதேறி வருவதைப் பார்க்கக் கொடுத்து வைத்தவர்களாய் இக்காட்சியால் கண்ணேறுபட்டு விடுமோ என்ற அச்சத்தால் திருமஞ்சனம் ஆட்டுவதுபோல நறுமணநீரை வீதிதோறும் தெளிக்கின்றார்கள்.

குங்கும மப்பிக் குளிர்சாந்த மட்டித்து
மங்கல,வீதி வலஞ்செய்து மணநீர்
அங்கு அவனோடு உடன்சென்று அங்கு ஆனைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்

இப்படி ஆய்ப்பாடியிலே பிறந்த கண்ணனுக்குத் தான் வாழ்வரசியாக வாழ்க்கைப்பட்டதாகக் கண்ட ஆண்டாளின் கனவை; மண்ணில் வந்த வானம் என்பதா? அல்லது மண்ணில் உள்ளோர்க் கெல்லாம் வானம் வசப்படும் என்பதா? என்ற தடுமாற்றத்தோடு ஆண்டாள் பாசுரத்தை அனுபவிப்பவர்கள் பேறு பெற்றவர்களாவர்.

ஆயனுக் காகத்தான் கண்ட கனாவினை
வேயர் புகழ்வில்லி புதுத்தூர்க்கோன் கோதைசொல்
தூயதமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர்
வாய நன்மக்களைப் பெற்று மகிழ்வரே!

சரவணபவா

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான்பின் செல்லேன்–
பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை
தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே"

தலம் : திருமலைக்கேணி

தீர்த்தம் : வள்ளிசுனை, தெய்வானை சுனை எனும் வற்றாத ஜீவ ஊற்றுக்கள்.

விருட்சம் :நாவல் மரம்

திருத்தல மகிமை :

ஒரு திருத்தலம் என்பது மூர்த்தியினாலோ, தீர்த்தத்தினாலோ, தல விருட்சத்தினாலோ சிறப்புற்று விளங்கும். திருமலைக்கேணி என்னும் இத்திருத்தலம் இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்புடையதாகும்.

கலியுக வரதன் கந்தப் பெருமான் பழநி செல்லும்போது தமது தாகம் தணிக்க, கோலச்சிறகுகள் விரித்தாடும் வண்ண மயில்கள் சூழ்ந்த பசுமையான இம்மலைச் சரிவில்

திருமலைக்கேணி திருத்தலம்

இறங்கியதாகவும், தமது வேலால் நீர் பருக ஓரிடத்தை குத்தியபோது வெதுவெதுப்பான நீர் ஊற்று கிளம்பியதென்றும், மற்றொரு இடத்தை குத்தியபோது மிகவும் குளுமை யான நீரூற்று தோன்றியதாகவும், இதுவே தற்போது இத்திருத்தலத்தில் மூலவர் முருகப் பெருமானின் இருபுறமும் உள்ள வற்றாத ஜீவ ஊற்றுக்களாக உள்ளதென்றும் செவிவழிச் செய்தி உள்ளது.

கடும் கோடையிலும் வற்றாத வள்ளி சுனை, தெய்வானை சுனைகளில் நீராடி பக்தர்கள் முருகப் பெருமானை தரிசனம் செய்து பரவசம் அடைகின்றனர். இத்தீர்த்தங்களில் நீராடும்போது தமது உடல் பிணிகள் நீங்கப் பெற்று பக்தர்கள் மனம் மகிழ்வதை நாம் கண்ணாறக் காண முடிகிறது.

சோலை சூழ்ந்த இத்திருத்தலத்தில் நிறைந்துள்ள மயில்களுக்கு உணவளித்து மக்கள் தங்கள் கவலைகளை மறக்கின்றனர். மேலும், திருமணமாகாத கன்னிப்பெண்கள் தங்கள் கைகளில் உணவினை வைத்து மயில்களுக்கு வழங்கும்போது அந்த வண்ண மயில்கள் உணவு வழங்குபவரை ஏறெடுத்து பார்க்கும் பொழுது தங்களது தோஷங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடப்பதாக நம்புகின்றனர்.

எழில் கொஞ்சும் இத்திருத்தலத்தில் உறைந்திருக்கின்ற முருகப்பெருமானின் திருவருள் கருணையால் திருமுருகக் கிருபானந்த வாரியார் சுவாமிகள் இத்தலப் பெருமை உணர்ந்து, 1981 ம் ஆண்டிலும், 1991ம் ஆண்டிலும் தாமே முன்னின்று குடமுழுக்கு நடத்திய மிகப் பெருமைக்குரிய தலமாக திருமலைக்கேணி விளங்கி வருகிறது. 2003ம் ஆண்டு மூன்றாம் முறையாக குடமுழுக்கு சிறப்புடன் நடைபெற்றுள்ளது.

திருமலைக்கேணி திருத்தலத்தில் கந்தசஷ்டி பெருவிழா ஐப்பசி மாதத்தில் திருச்செந்தூருக்கு அடுத்தபடியாக நடைபெறும் பெருமைமிக்கத் தலமாக விளங்கி வருகிறது. தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக்களும் சிறப்புற நடைபெற்று வருகிறது. இத்திருக் கோயிலில் இரண்டு கால பூஜைகள் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்குவதற்காக சஷ்டி மண்டபம் போன்ற வசதிகளும் உள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் மிகச் சிறந்த சுற்றுலா தலங்களில் ஒன்றாக திகழ்ந்து வரும் திருமலைக்கேணி திருத்தலம், வாரியார் சுவாமிகளால் "**கீழ்ப்பழநி**" எனும் போற்றுதலுக்குரிய தலமாக உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட செங்குறிச்சி & கம்பிளியம்பட்டி ஊராட்சிகளின் எல்லையில் திண்டுக்கல் புகை வண்டி நிலைய சந்திப்பிலிருந்து 23 கி.மீ. தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. திண்டுக்கல்—செந்துறை செல்லும் வழித்தடத்தின் வாயிலாகவும், நத்தம்—செந்துறை வழியாகவும் இடைவிடாது பேருந்துகள் இயங்கி வருகின்றன.

திருமலைக்கேணி வருக!
முருகப்பெருமான்
திருவருள் பெறுக!!
ஓம் சரவணபவ!

து.பாலதண்டாயுதம்,
எம்.ஏ.,
செயல்அலுவலர்.

எண்ணச்சிதறல்

அன்புடையீர்,
திருக்கோயில் ஆனிமாத இதழில் முதல் பக்கத்தி லிருந்து கடைசிவரை பலவித கருத்துக்களையும் திருத்தலங் களையும் தியானம் மற்றும் கீதையின் சாரம் மனதை உருக்குகின்றன. ஆன்மிகப் பெருமக்களுக்கு நல் விருந்து. தொடர்க! சிறக்க! பல்லாண்டு நீடித்து தழைக்க!

–த. புண்ணியகோட்டி, செய்யாறு.

ஐயா வணக்கம்,
ஐயா தாங்கள் மாதம்தோறும் வெளியிடும் திருக்கோயில் மாதஇதழ் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக் கிறது. இது இந்துக்களின் பெருமையை நிலைநாட்டுவ தற்கும் மற்றும் ஊக்கப்படுத்துவதுமாக உள்ளது. இறை வனின் அருள்பெறவும் நம் மக்களின் பெருமையை அறி யவும் தவறாமல் படித்துவருகிறோம். நன்றிகள் பலபல!

-S. K. பிரபு, சாவடிப்பாளையம் புதூர், மொடக்குறிச்சி

திருப்பெருந்துறை என அழைக்கப்பட்டுவரும் ஆவுடை யார்கோயில் என்ற அரிய அற்புத தலத்திற்கு சிறுவயதில் சென்று வந்திருக்கும் எனக்கு அக்கோயிலின் அருமை பெருமைகள், அதிலும் குறிப்பாக இறைவனுக்குப் பதிலாக இறையடியாரான மாணிக்கவாசகப் பெருமானிற்கு இறைவனிற்கு இணையானதொரு அந்தஸ்து வழங்கப் பட்டிருக்கும் சிவபெருமானின் கருணை, ஆலயத்தில் அமைந்துள்ள அபூர்வ அதிசயிக்கத்தக்க சிற்பக்கலை நயத்துடன் கூடிய வேலைப்பாடுகள் (சிற்பக்கருவூலம்) இவை அனைத்திற்கும் மேலாக, மாணிக்கவாசகரின் பாடல்களினால் ஈர்க்கப்பட்டு ஜி.யு.போப் என்ற கிறித்தவப் பாதிரியார், திருவாசகத்தை ஆங்கிலத்தில் முதன்முத லாக மொழி பெயர்த்திட்ட அன்றைய வரலாறு போன்ற வரலாற்று உண்மைகளை தெளிவுபட உணர்த்தியிருந்தது, மாணிக்கவாசகரும் ஆவுடையார்கோயிலும் என்ற கட்டுரை.

இரா. வளையாபதி, 50, தோட்டக்குறிச்சி அஞ்சல்,
கரூர் மாவட்டம்– 639113

திருமூலர் அருளிய 'திருமந்திரம்' எனும் பத்தாம் திருமுறை நூலின் சிறப்பை கோடிட்டுக்காட்டியதுடன் சிவனே ஜீவனுமாயிருக்கிறான் என்ற இறை தத்துவத்தையும், சிவனாயிருக்கிற சிவனை உணர்ந்து கொள்கிற நெறிமுறைகளையும், திருமந்திரத்தில் எவ்வாறு திரு மூலரால் விவரிக்கப்பட்டுள்ளன என்பதையும் அற்புத கட்டுரைவாயிலாக டாக்டர் திருமதி.ராதா தியாகராஜன் அவர்கள் ஆய்வு செய்த விதம் பிரமிக்க வைத்துவிட்டது.

த.சத்தியநாராயணன், 13/7, கிழக்கு காலனி,
ஐ.சி.எப்., அயன்புரம், சென்னை–38

பொறுமை தரும் பலம்

எது நடந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள். எதைக் குணப்படுத்த முடியாதோ அதைப் பொறுத்தேயாக வேண்டும். மகிழ்ச்சியுடன் பொறுத்துக்கொள்ளுங்கள். காலை முதல் நடு இரவு வரை நூற்றுக்கணக்கான வசதிக் குறைவுகள், தொல்லைகள் மற்றும் துன்பங் களுடன் வாழ கற்றுக்கொள்ளுங்கள். பொறுமை, உள் பலம் மற்றும் இச்சா சக்தி உங்களிடம் அதிகரிக்கும். பிரதிகூலமானதை அனுகூலமானதாக நீங்கள் மாற்றி அமைப்பீர்கள். ஒருவரது அடிப்படைத் தேவைகளுக்குக் கூட மற்றவரை அண்டி இருப்பதுதான் ஒருவரது அமைதியை இழப்பதற் கான முக்கியமான காரணமாகும். 'பராதீனம் ப்ராண சங்கடம்', பிறரை அண்டி இருப்பது என்பது துன்பம் தருவதுதான். சுதந்திரம் ஆனந்தம் அளிக்கும். எனவே தன் காலில் நிற்க முயலுங்கள். முடிந்த மட்டும் முயலுங்கள்.
மனப்பூர்வமாக முயன்றால் பல்வேறு துறைகளில் உங்களால் தன் காலில் நிற்க முடியும் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள். உங்கள் உடைகளை நீங்களே துவைத்துக் கொள்ளுங்கள். உங்கள் அறையை நீங்களே சுத்தம் செய்து கொள்ளுங்கள். உங்கள் உணவை நீங்களே சமைத்துக்கொள்ளுங்கள். உங்கள் கடிதங்களை நீங்களே டைப் அடித்துக்கொள்ளுங்கள். இவற்றை நீங்கள் தினமும் செய்துதான் ஆகவேண்டும் என்ப தில்லை. தீராது என்ற நிலையில் இந்தச் சிறிய திறமைகள் உங்களுக்குப் பெரும் உதவியாக அமையும்.

– சுவாமி சிவானந்தா

நரம்புக்கோளாறு நீக்கும் பேரம்பாக்கம் சோளீஸ்வரன்

பழங்கால ஆலயங்கள் சமுதாய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுபோல, சில ஆலயங்கள் நோய் தீர்க்கும் மருந்தாகவும் அமைந்துள்ளன. அந்த வகையில் நரம்புக் கோளாறு நீக்கும் சிறந்த ஆலயமாகத் திகழ்வது பேரம்பாக்கம் ஸ்ரீசோளீஸ்வரன் ஆலயம்.

தொன்மைச் சிறப்பு

முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்ட இவ்வாலயம் திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இன்றைய பேரம்பாக்கம் சோழர் காலத்தில் பெரும்பாக்கம் என்று அழைக்கப்பட்டது.

மணவிற்கோட்டம் பாசாலி நாட்டில் உள்ள இரட்டைப்பாடி கொண்ட சோழநல்லூர் எனும் பெரும்பாக்கம் என இவ்வூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாக்கம் நாளடைவில் மருவி பேரம்பாக்கமாக மாறியுள்ளது. பேரம்பாக்கம் இறைவன் ஸ்ரீ சோளீஸ்வரன் ஆலயம் கி.பி.1112—இல் உருவாக்கப்பட்டதாகும். இதன் அன்றைய பெயர் குலோத்துங்க சோழீஸ்வரமுடைய மகாதேவர். இப்பெயரும் தற்போது சுருங்கி ஸ்ரீ சோளீஸ்வரன் ஆகியுள்ளது இறைவியரின் திருப்பெயர் ஸ்ரீ காமாட்சி.

கல்வெட்டுக்கள்

1947—ஆம் ஆண்டு இந்திய கல்வெட்டுத் துறை ஆய்வின் மூலம் இவ்வூரில் 14 கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டு உள்ளன. அதன் வாயிலாக இவ்வூரின் வரலாறு, நன் கொடையாளர்கள் வரலாறு நமக்கு தெரிய வருகிறது. இக் கோவில் சோழ மன்னனைப் போல, விஜயநகர பேரரசனாலும் திருப்பணி செய்யப்பட்டுள்ளது

நியாயம்

இவ்வூரின் ஆட்சிப் பொறுப்பு 'நியாயம்' என்ற பஞ்சாயத்து அமைப்பின் வாயிலாக நிர்வாகம் செய்யப்பட்டது. நியாத்தார் என்ற உறுப்பினர்கள் மூலம் நியாயம் நடத்தப் பட்டது. நாயக்கர் காலத்தில் இவ்வூரில் ஒரு மடம் இருந்த செய்தியும் கல்வெட்டின் வாயிலாக தெரிய வந்துள்ளது.

பணிவின் பெருமை

தண்ணீர் இறைக்கும் ஏற்றம் பணிவதனால், கிணற்றிலுள்ள நீரை முகக்கின்றது. அங்ஙனம் ஆன்றோர்களிடம் பணிந்தால், அவர்கள் பால் தேங்கிக்கிடக்கும் அறிவு வெள்ளத்தை நாம் முகர்ந்துகொள்ளலாம். பணிவதால் நமக்கு ஒன்றும் இழிவு வந்துவிடாது.

– சுவாமி விவேகானந்தர்

நரம்புக்கோளாறு நீக்கும் சிவன்

இவ்வாலயத்தின் சிறப்பு அம்சமே நரம்பு சம்பந்தப்பட்ட கோளாறுகளை அறவே நீக்கும் அருமருந்தாக இறைவன் திகழ்வதே. இதற்கு சான்றாக, பிரார்த்தனை நிறைவேறிய பக்தர்கள் திருப்பணி செய்து வருவதை கண்கூடாகக் காணலாம்.

வழிபடும் முறை

நரம்புக்கோளாறு, நரம்புத்தளர்ச்சி போன்ற குறைபாடு உள்ளவர்கள் சோமவாரத்தில் (திங்கட்கிழமை) அகத்தூய்மை மற்றும் புறத் தூய்மையோடு இவ்வாலயம் வந்து அர்ச்சனை செய்து மனமுருகி, நம்பிக்கை யுடன் வேண்டிக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து ஆறு வாரம் தவறாமல் வந்து தரிசனம் செய்ய வேண்டும். வேண்டுதல் நிறைவேறியதும், மீண்டும் இவ்வாலயம் வந்து தங்களால் இயன்ற வகையில் திருப்பணிக்கு உதவுவதுடன், அபிஷேக ஆராதனைகளும் செய்து வேண்டுதலை முடிக்க வேண்டும். அவரவர் வசதிக்கேற்ப காணிக்கை செலுத்தலாம்.

ஆலய அமைப்பு

பேரம்பாக்கம் நகரின் ஈசான மூலையில் அமைந்துள்ளது. ஆலய நுழைவாயில் தெற்கு நோக்கியுள்ளது. இராஜகோபுரம் இல்லை. ஆலயம் நுழைந்ததும் கணபதி, அருகே காசிவிஸ்வநாதர், அருகே மூலவர் ஸ்ரீ சோளீஸ்வரன், கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். அன்னை ஸ்ரீகாமாட்சி தெற்கு முகமாக காட்சி தருகிறாள். இந்த இரு சன்னதிகள் மட்டுமே பழமைத் தன்மை யோடு திகழ்கின்றது.

ஆலயத்தின் மேற் புறத்தில் வள்ளி—தெய்வானை உடனுறை முருகன் சன்னதியும், கீழ்ப்புறம் ஸ்ரீஐயப்பன் சன்னதியும் அமைந்துள்ளன. தல விருட்சம் வில்வம், தீர்த்தம் கூவம் ஆறாகும்.

ஆற்றுத் திருவிழா

காணும்பொங்கல் அன்று ஆற்றுத்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். அப்போது, பேரம்பாக்கத்தை சுற்றியுள்ள கூவம், நரசிங்கபுரம், சிவபுரம், களாம்பாக்கம், சிற்றம்பாக்கம், சிறுமணவூர், இலம்மையங்கோட்டூர், மாரிமங்கலம் என பல்வேறு புகழ் பெற்ற ஆலயங்களின் உற்சவ மூர்த்திகள் ஒரு சேர கூவம் ஆற்றில் அணிவகுக்கும் காட்சி கண்கொள்ளாதது. இவ்விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள்.

பிற ஆலயங்கள்

பாதிரி விநாயகர், ஆயாரம்மன், திரௌபதி

அம்மன், கன்னியம்மன், படவேட்டம்மன், செல்வவிநாயகர், ஸ்ரீவைகுண்டப்பெருமாள், காசி விஸ்வநாதர், நல்லாத்தம்மன், புட்டாலம்மன், அங்காளம்மன், அகோர வீரபத்திரர், மந்தவெளி அம்மன், தீப்பாய்ந்த அம்மன் என ஊர் முழுவதுமே பழங்கால ஆலயங்கள்

ஊர் அமைவிடம்

கூவம், இலம்மையங்கோட்டூர், தக்கோலம், திருப்பாச்சூர், திருவாலங்காடு என தொண்டை வள நாட்டின் பாடல் பெற்ற தலங்களுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது பேரம்பாக்கம்.

சென்னைக்கு மேற்கே 60 கி.மீ. அரக்கோணத்திற்கு கிழக்கே 30 கி.மீ. திருவள்ளூருக்கு தென் மேற்கே 18 கி.மீ. காஞ்சிபுரத்திற்கு வடக்கே 45 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இரயில் மார்க்கமாக வர விரும்புவோர், சென்னை—அரக்கோணம் வழித்தடத்தில் உள்ள கடம்பத்தூர் இரயில் நிலையத்தில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலமாக பேரம்பாக்கம் வரலாம்.

சென்னையில் இருந்து பேருந்து வழித் தடத்தில் வர விரும்புவோர், முதலில் பூந்தமல்லி பேருந்து நிலையம் வர வேண்டும்.

பிறகு அங்கிருந்து பேருந்து வழித்தடம் எண்: 86-A, 91, 91-B, 91-P, 107, 107-A, 138-B மூலம் பேரம்பாக்கம் வந்து சேரலாம். பேரம்பாக்கம் பெரிய ஊர் என்பதால் பூ, மாலை மற்றும் பூஜை சாமான்கள் எளிதில் கிடைக்கும்.

தரிசன நேரம்

ஸ்ரீ சோளீஸ்வரன் ஆலயம் காலை 6—00 மணி முதல், பிற்பகல் 1—00 மணி வரையிலும், மாலை 4—00 மணி முதல் 8—00 மணி வரையும் திறந்திருக்கும்.

இவ்வாலயத்தில் காணும் பொங்கல் ஆற்றுத்திருவிழா, விநாயகர் சதுர்த்தி, பிரதோஷம், கிருத்திகை ஆரூத்ரா, சிவராத்திரி ஆகியவை வெகு சிறப்புடன் நடந்து வருகின்றது.

மன்னர்கள் காலத்திய கோயில் என்றாலும், அதன் முழு வடிவை காண இயலவில்லை. சிறிய ஆலயமாக பெரிய இடத்தில் அமைந்துள்ளது. நரம்புக்கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் பலனடைந்து வருவ தால் இக்கோயிலின் புகழ் மெல்ல, மெல்ல வளர்ந்து வருகிறது.

—பனையபுரம் அதியமான்.

நலம் தரும் நாகநாதர்

சோழ வள நாட்டில் திருச்சி நகரில் உள்ள அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோவில் மிகப்பழமையானதும், சக்தி வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமான திருக்கோயில் ஆகும். "சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி" எனப் பாடல் பெற்ற ஸ்தலமான அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள நிலக் கோயில் ஆகும். இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுவாமி பெயர் நாகநாதசுவாமி அம்பாள் பெயர் ஆனந்த வள்ளி அம்பாள்.



இத்திருக்கோயில் அமைந்துள்ள இடம் ஆகும். சிவ பெருமானே நாகநாதராக இத்திருத்தலத்தில் எழுந்தருளி ஆனந்தவல்லியை திருமணம் செய்து கொண்ட இத்திருத்தலம் புண்ணிய பூமியாக திகழ்கிறது. எனவே, இத்திருத்தலத்தில் திருமணம் நடத்தினால் மணமக்கள் நாகநாதர் அருளால் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ்வர் என்பதனை மனதில் கொண்டு பல்வேறு மாவட்டங்களில் இருந்து மணமக்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து திருமணம் செய்து கொள்கின்றனர்.

திருச்சி நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள சத்திரம்பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோயில் தெப்பக் குளத்தின் கிழக்கு கரையில் நந்திகோயில் தெருவில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு வெளியூரில் இருந்து வரும் பக்தர்கள் டவுன் ஸ்டேஷன் மற்றும் கோட்டை ரயில் நிலையத்தில் இறங்கி மலைக்கோட்டை தெப்பக்குளம் வழியாகவும், திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து சத்திரம் பேருந்துநிலையம் வழியாகவும் இத்திருக் கோயிலை அடையலாம்.

திருக்கோயில் வரலாறு:-

காத்யாய முனிவரின் கடுந்தவத்தினால் உமாதேவியே முனிவரின் மகளாக பிறந்து ஆனந்தவல்லி என்னும் திருப்பெயர் கொண்டு இறைவனை மணம் செய்ய விரும்பி கங்கை தான் தவம் செய்யும் இடத்திற்கு எழுந்தருள வேண்டும் என ஆனந்தவல்லி தவமிருந்தார். அம்பிகையின் தவத்தினால் கங்கையே இங்கு தோன்றியது. சங்கரனே சுயம்பு மூர்த்தியாக இத்திருத்தலத்தில் சிவகங்கை கரையில் நாக நாதராக ஆனந்தவல்லி அம்மனுக்கு தரிசனம் தந்து திருமணம் செய்து கொண்ட சிறப்புடைய தலம் நாகநாதசுவாமி திருக்

இத்திருத்தல பகுதியில் வாழ்ந்து வந்த சாரமா முனிவர் என்பவர் நாகலோகத்தில் இருந்து நாகக்கன்னிகைகளின் உதவியால் செவ்வந்தி மலர் கொண்டு வந்து நந்தவனம் அமைத்து மலைக்கோயிலில் உள்ள தாயுமான சுவாமிகளையும், நிலக்கோயிலில் உள்ள நாக நாதரையும் வழிபட்டு வந்தார். அதேபோல் நாக மன்னர்கள், நாக கன்னிகள் எழுவரும் இத்திருத்தலத்தில் சுயம்பு மூர்த்தியாக எழுந் தருளியுள்ள நாகநாதரை வழிபட்டு வந்ததால் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் நாகநாதசுவாமி என அழைக்கப்படுகிறார்.

மலைக்கோயிலும், நாகநாதர் கோயிலும்

மலையின் ஒரு சிகரத்தில் அமைந்திருக்கும் சிராமலைநாதர் திருக்கோயில் மலைக் கோயிலாகவும், அடிவாரத்தில் அமைந்திருக் கும் நாகநாதர் கோயில் நிலக்கோயிலாகவும் அமைந்திருக்கும் அற்புதத் தலம். மலைக் கோயில் நந்தி நாகநாதசுவாமி ஆலயத்தின் அருகில் அமைந்துள்ளதும், சாரமாமுனிவர் மலைக்கோயிலில் உள்ள தாயுமானவரையும், நாகநாதரையும் செவ்வந்தி மலர் கொண்டு வழிபட்டு வந்துள்ளதும், தாயுமானவர்

நாகநாதரை வலம் வருவதும், நாகநாதர் தாயு மானவரை வலம் வருவதும் இரு கோயில் களுக்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துக்காட்டு கிறது. மலைக்கோயிலில் நடைபெறும் நவ ராத்திரி திருவிழாவின் விஜயதசமி நாளன்று சிராமலைநாதர் இத்திருக்கோயிலில் எழுந் தருளி இரவில் தங்கி குதிரை வாகனத்தில் புறப்பட்டு அம்பு போட்டு விட்டு மலைக் கோயிலுக்கு செல்வதும், நாகநாதசுவாமி கோயில் வெளிப்பிரகாரம் மலைக்கோயிலின் வெளிப்பிரகாரமாக அமைந்திருப்பதையும் வைத்து இவ்விருகோயில்களின் இணைப்பை உறுதிபடுத்தும் நிகழ்ச்சியாகவும் மலைக் கோயிலுக்கு முன்பு தோன்றிய நிலக் கோயிலாக இத்திருக்கோயிலை கருதலாம். மலைக்கோயிலுக்கு படி ஏறி தாயுமானவரை தரிசிக்க இயலாதவர்கள் இந்நிலக்கோயிலில் உள்ள நாகநாதரை வழிபடவே இத்திருக் கோயில் எற்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தும் உள்ளது.

ஆலயத்தின் சிறப்பு:-

1. திருமண யோக ஸ்தலம்:–

இத்திருத்தலத்தில் இறைவன் எழுந்தருளி ஆனந்தவல்லியை திருமணம் செய்து கொண்டதால் இத்திருக்கோயிலுக்கு வந்து நாகநாதரை வழிபட்டு வருவோருக்கு விரைவில் திருமணம் நடக்கும் என்பதும், இத்திருத்தலத்தில் திருமணம் செய்பவர் களுக்கு நாகநாதர் அருளால் நலம் பல கிட்டும் என்பதும் கண்கூடான உண்மை. ஒரே இடத்தில் நின்று சுவாமி மற்றும் அம்பாளை தரிசனம் செய்யலாம். இவ் வாறு தொடர்ந்து சுவாமி மற்றும் அம்பாளை ஒரே நேரத்தில் தரிசனம் செய்து வருபவர்களுக்கு திருமண பாக்கியம் கிட்டும். அதே போல் இத்திருக்கோயி லில் உள்ள துர்க்கை அம் மனை செவ்வாய் மற்றும் வெள்ளிகிழமைகளில் எலுமிச்சை மற்றும் நெய் விளக்கு ஏற்றி வழிபட்டு வரும் பெண்களுக்கு திருமணம் விரைவில் நடக்கும்.

2. ராகு ஸ்தலம்:–

இத்திருத்தலத்தில் சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ள நாகநாதரை நாககன்னிகள் வழிபட்டு வந் துள்ளனர். எனவே, நாகதோஷத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து நாகநாதரை வழிபட்டு வந்தால் அவர் களுடைய நாகதோஷம் விலகி வளம் பல பெற்று வருகின்ற காரணத்தினால் இத்திருக் கோயில் ராகு ஸ்தலமாகவும் விளங்குகிறது.

3. ஜுரேஸ்வரர் மகிமை:–

இத்திருக்கோயிலின் மேற்கு கோபுர நுழைவு வாயிலின் வடக்கு பிரகாரத்தில் அமைந்துள்ள ஜுரேஸ்வரர் தீராத நோய் தீர்க்கும் வல்லமை பெற்றவராக விளங்கு கிறார். தீராத ஜுரம் மற்றும் இதர வியாதி களால் பாதிக்கப்பட்டவர்கள் இத்திருக் கோயிலுக்கு வந்து ஜுரேஸ்வரரை வழிபட்டு பன்னீர் மற்றும சந்தனத்தினால் அபிஷேகம் செய்தால் அவர்களின் வியாதி தீரும் என் பது இத்திருக்கோயிலின் சிறப்பாகும்.

4. தட்சிணாமூர்த்தி மகிமை:–

இத்திருக்கோயிலில் வேறு எந்த திருக் கோயிலிலும் இல்லாத வகையில் தட்சிணா மூர்த்தி அமர்ந்த நிலையில் இடது காலை இரு சர்ப்பங்கள் மீது வைத்தவாறு எழுந்த ருளியுள்ளார். வியாழக்கிழமைகளில் இத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள தட்சிணா மூர்த்தியை (குரு) வழிபடுவதன் மூலம் சிறந்த ஞானம் கிட்டுவதுடன் தோசங்களும் நிவர்த் தியாகும்.

இதர சிறப்பம்சங்கள்:–

இத்திருக்கோயிலில் அம்மன் சன்னதி முன்பு அமைந்துள்ள நந்தியானது தீர்த்தவாரி நிகழ்ச்சியின் பொழுது திருக்குளத்தில் எழுந்தருளும் நடராசரை அம்பாள் தரிசனம் செய்யும் பொருட்டு சற்று விலகி இருப்பதும், சனி பக வான் இத்திருக்கோயிலில் காக வாகனத்தில் புறப்பாடு செய்வதும் இத்திருக் கோயிலின் சிறப்பாகும்.

திருக்குளம்:–

இத்திருக்கோயிலின் உட் பகுதியில் அம்மன் சன்ன திக்கு எதிரே திருக்குளம் அமைந்துள்ளது. திருக் குளத்தின் பெயர் "சிவ கங்கை தீர்த்தம்". சிவ பெருமானே கங்கையாக தோன்றி ஆனந்தவல்லியை திருமணம் செய்து



கொண்டதால், இத்திருக்குளத்தில் நீராடி அருகம்புல்லும் மூன்று இலையுடைய வில்வத்தாலும் இறைவன் இறைவியை அர்ச்சனை செய்வோருக்கு புத்திர பாக்கியம் ஏற்படுவதுடன் தீராத வியாதிகள் தீரும். இத்திருக்குளத்தை பிரதட்சிணம் செய்வோர் அனைத்து மூர்த்திகளையும் ஏக காலத்தில் தரிசித்த பலனை அடைவர்.

திருவிழாக்கள்:-

இத்திருக்கோயிலில் மாசி மாதம் மாசிமக திருவிழா சிறப்பாக நடைபெற்ற வருகிறது. வைகாசி மாதம் வசந்தோற்சவம், ஆனி, மார்கழி மாதத்தில் நடராசர் திருவீதி உலா ஆடிப்பூரத்தில் அம்பாள் புறப்பாடு. புரட்டாசி மாதம் நவராத்திரி, ஐப்பசி மாதம் கந்தசஷ்டி, கார்த்திகை மாதம் தீப திருவிழா, தைபூசத்தன்று, பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா ஆகிய திருவிழாக்கள் நடைபெறுகிறது. மாதந்தோறும் நான்கு வேதங்கள் வோத பிரதோச வழிபாடு மற்றும் புறப்பாடு மிக விமரிசையாக நடைபெற்று வருகிறது.

இவற்றில் மாசி மகப்பெருவிழா நவராத்திரி மற்றும் கந்தசஷ்டி முதலியவை மிக முக்கிய திருவிழாக்கள் ஆகும்.

பூஜை விவரம்:-

இத்திருக்கோயிலில் தினசரி ஐந்து கால பூஜை நடைபெறுகிறது.

காலை 6.00 மணி–நடைதிறப்பு
காலை 6.30 மணி–உசத் காலம்
காலை 8.30 மணி–காலசந்தி
பகல் 12.00 மணி–உச்சி காலம் & நடை சாத்துதல்
மாலை 4.00 மணி–நடை திறப்பு
மாலை 5.30 மணி–சாயரட்சை
இரவு 9.00 மணி–அர்த்தசாமம் & நடை சாத்துதல்.

அனைவரும் வருக... நாகநாதர் அருள் பெறுக.

சக்கரத்தாழ்வார் பெருமை

காக்கும் கடவுளாம் திருமால் அறுகோணத்திற்கு நடுவே சக்கர வடிவினராய் எழுந்தருளியிருக்கும் தத்துவங்களை வைகானஸ ஆகமம் விளக்குகிறது. ஒரு சமயம் பிரம்மதேவனுடைய சிரஸை பரமசிவன் கொய்ததினால் ஏற்பட்ட பாதகத்தை நிவர்த்திக்க பரமசிவன் திருமாலை வேண்ட, திருமால் பரமசிவனுக்கு பத்திரிகாசிரமத்தில் சுதர்ஸன வழிபாட்டை விளக்கி சக்கரத்தாழ்வாரை வழிபடும்படி அருளுகிறார். அதன்படி பரமசிவனும் கைலாயத்தில் முறைப்படி சக்கரத்தாழ்வாரை வழிபட, பிரம்மதேவனின் சிரசைக் கொய்ததினால் ஏற்பட்ட பாவங்கள் நிவர்த்தியாகின்றன. தேவர்கோன் முதலான சகல தேவர்களும் பரம சிவனிடமிருந்து சுதர்ஸன வழிபாட்டை அறிந்து சக்கரத்தாழ்வாரை வழிபட்டு திருவருளைப் பெற்றார்கள். சக்கரத்தாழ்வாரை முறையோடும், நெறியோடும் வழிபடுகின்றவர்கள் உடல் நலமும், நீங்காத செல்வமும் குறையாத ஆயுளும் இன்னும் என்னென்ன பலன்களை வேண்டி வழிபடுகிறார்களோ அவற்றையெல்லாம் பெறக்கடவர் என்று ''ஸுதர்ஸன ஸதகம்'' என்னும் நூலில் விரிவாக சொல்லப்பட்டுள்ளது.

பாரம்பரிய பாதுகாப்புப் பணியில்

REACH நிறுவனம்

தொல்பொருள் ஆராய்ச்சிக்கழகத் தலைவராக இருந்து ஓய்வு பெற்ற டாக்டர் திரு.டி.சத்யமூர்த்தி அவர்களைத் தலைவ ராகக் கொண்டு சென்னை ஆடிட்டர் திரு.ஹரிஹரன், கோவில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் திருவடியான் திருச்சபை அன்பர் திரு. சிவபாதசேகரன், தொழிலதிபர்கள் திரு.பி.என்.சுப்பிரமணியன், திரு. சுந்தர் பரத்வாஜ் மற்றும் Temple Cleaners எனும் யாஹூ இணையதள குழுமத்தை ஆரம் பித்த திரு.ராஜன் கணேஷின் நண்பர் களாலும் துவக்கப்பட்டுள்ள தொண்டு நிறுவனம் **R.E.A.C.H. FOUNDATION**.

பாரதத்தின் பழமை பறைசாற்றும் கிராமங்கள் இன்று உலகமயமாக்கல் எனும் மாயையால் சிறிது சிறிதாக சுருங்கி வரு கின்றன. தங்கள் கிராமத்தின் அரிய பெரும் பண்டைய வரலாறு, தொன்மை, மண்ணின் பெருமையை இன்று மண்ணின் மைந்தர்கள் அறிந்துகொள்ள முயல்வதில்லை. தங்கள் சுற்றத்துச் சூழல்களிலிருந்து அறியும் கல்வியை மறந்து இன்று கணினியையும், புத்தகங்களையுமே நம்பும் நிலைமை ஏற்பட்டுள்ளது! உலகமயமாக்கலில் அவர்கள் சேர்ந் தால் மட்டும் போதுமா? பண்டைய சிறப்புகளும், கலைகளும், பாரம்பரியமும் பாதுகாக்கப்பட வேண்டாமா? தொன்றுதொட்டு, செவிவழி கலாச் சாரமாக, கல்வி போதனை முறையாக வளர்ந்து, ஏறத்தாழ *5000* ஆண்டுகளுக்கு நிலைத்த நம் நுண் கலைகள் இன்று கலைந்து போகும் நிலை ஏற்பட் டுள்ளது.

இந்தப் பழங்கலைகள் மற்றும் புராதனக் கட்டி டங்களை பேணிக்காக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ளது **R.E.A.C.H. Foundation** நிறுவனம்.

இந்நிறுவனத்தின் நோக்கம்

கிராம மக்களிடையே, தங்கள் பாரம்பரியத் தையும், மண்ணையும் மதிக்க வைக்கவும், விழிப் புணர்வு எற்படுத்துவது முதல் குறிக்கோள். அத்தகைய விழிப்புணர்ச்சி, அவர்களின் பண்டை மரபுக் கல்வி கற்கவும், பேணிகாக்கவும், ஒரு கிரியா ஊக்கியாக உருவாகும். அத்தகைய பாரம்பரியத்தின் முக்கிய சின்னம்—புராதன கட்டிடங்கள். அது ஒரு நினைவு மண்டபமாக இருக்கலாம், கலை நயம் மிக்க கல் சிற்பங்கள் மற்றும் வரலாற்றுச் செய்தி தாங்கிய கல்வெட்டு நிறைந்த கோவிலாக இருக்கலாம்;

முதியோர் கதை சாற்றும் மயான பூமியோ இல்லை மன்னர்கள் கோலோச்சிய கற்கோட்டையோ, அல்லது நம் முன்னோர் பாரம்பரியமிக்க பொருள்களால் கட்டிய பழைய வீடாக இருக்கலாம். ஊர் விழாக்களிலும், கதாகாலட்சேபம், வில்லுப் பாட்டு, பாட்டிமார் பாட்டு போன்றவையாகக் கூட இருக்கலாம். இவை யாவும் நம் சொத்துக்களே.

இன்றைய சமுதாயம், பாட்டு, பரதம் என பல கலைகளை பேணி காத்தாலும், கட்டடக் கலைகள், புராதன சின்னங்களை பேணி காக்கும்படியான தொழில் நுட்பமோ, பொருளுதவியோ, அல்லது அதன் சிறப்புக்களையோ மக்களுக்கு சேர செய்வது தலையாய நோக்கம்.

கல்வி

எல்லா ஊர்களிலும், முக்கியமாக கிராம மக்க ளிடையே பண்டைய கலாச்சாரத்தை பற்றிய விழிப் புணர்வு, கல்வி கற்பித்தல்.

கிராம இளைஞர்கள், கல்வெட்டு, பனை ஓலைகள் படிக்கவும், அதன் அர்த்தங்களை அறிந்து கொள்ள வும், அதன் மூலம், தத்தம் மண்ணின் அரிய செய்திகளையும், வாழ்க்கை முறையையும் கற்றல்.

அவற்றை எப்படி பேணுதல், பராமரித்தல் போன்றவற்றையும் கற்பித்தல். இக்கல்வி முறையை முறைமைபடுத்த ஆரம்பித்துள்ள கல்வி மையம், **ACADEMY OF ARCHAEOLOGY & SCIENCES OF ANCIENT INDIA (A.A.S.A.I).**

கோவை லக்ஷ்மி மெஷின் ஓர்க்ஸ் (LMW) இயக்குநர், திருரவி சாம், இந்த கல்வி மையத்தின் தலைவராக பதிவியேற்க இசைந்துள்ளார்கள். இயக்குநராக திரு.தியாக.சத்தியமூர்த்தி பொறுப் பேற்கிறார்.

கலைச்சின்னங்களை பேணிகாத்தல்:

வேண்டுவோர்க்கு பழங்கால கட்டுமானம், தொல்பொருள் பேணிகாத்தல் பற்றிய தொழில் நுட்பம் அளித்தல்

பழங்காலத்து கலையழகும், கட்டிட கலையும் அப்படியே பின்பற்றி செப்பனிடுதலில் பயிற்சி யளித்தல்

நவீன பொருட்களைவிட கடுக்காய், சுண் ணாம்பு, வெல்லம் போன்ற சக்தி வாய்ந்த புராதன, தொன்மை மிக்க கட்டிட பொருட்கள் கொண்டு, பழங்கால சின்னங்களை சீர்செய்வதற்கான பயிற்சி, தொழில்நுட்பம் அளித்தல்

வெளிச்சத்தில் வராத, பழங்கலைகளை உலகுக்கு அறிமுகப்படுத்தல்; மேம்படுத்தல்.

புராதன சின்னங்கள், கலைகள் நீடிக்க வழிசெய்தல்:

கிராமீய கலைகள், சின்னங்களை வெளிக் கொணர்வதன் மூலம், "தொல்பொருள், புராதனக் கலை, பாரம்பரியச் சுற்றுலா" எனும் துறையை மேம்படுத்தி அதன் மூலம் அக்கிராம மக்களுக்கு லேலை வாய்ப்பினை அமைத்தல்;

வெளிவராத சுற்றுலாத் தலங்களை பற்றிய விழிப்புணர்வு வளர்த்து, பயணியர், மாணவர்களை அத்தகைய இடங்களுக்கு அழைத்துச் சென்று, விளக்கமளித்தல்; கிராம இளைஞர்களை "பாரம் பரிய சுற்றுலா" வழிகாட்டியாக உருவாக பயிற்சி யளித்தல்; பழங்கால கட்டிட பொருட்களின் நன்மைகளை மக்களிடையே பரப்புதல்

பொருளுதவி

நலிந்த கலைஞர்கள், வரலாற்றுக் கல்வியா ளர்கள், பண்டிதர்கள், ஆகியோருக்கு தங்களையும் தங்கள் கலையையும் காக்க உதவி புரிதல்

தொன்மையான கட்டிடங்கள், கோவில்கள், கலைகளை காக்க முன் வரும் நிறுவனங்கள், தனியார், இயக்கங்களுக்கு, தொழில்நுட்பம் புரிவதோடு மட்டுமல்லாமல், அந்த பலனைப் பெரும் மக்களையும் அந்நிறுவனத்தாரையும் ஒன்று சேர்த்தல்.

தற்போது மேற்கொண்டுள்ள பணிகள்:

★ "தமிழ் கல்வெட்டுக்கள் மூலம் நம் நாட்டின் தொன்மையை உணர்தல்" கருத்தரங்கம், பயிற்சிக் கல்வி.

★ பழங்கால சிதிலமடைந்த கோவில்கள், மண்ட பங்கள், வீடுகள், சின்னங்கள், தலங்கள் பற்றிய செய்தி, விவரங்கள் சேகரித்தல், கோப்பு தயாரித்தல்.

★ பராமரிப்பு, கட்டுதலுக்கான பொருளுதவி ஈட்டல்

★ கிராம இளைஞர்களை சுற்றுலா வழிகாட்டிகள் ஆக்க பயிற்சி.

★ தங்கள் ஊரிலுள்ள பாழடைந்த பழங்காலச் சின்னங்கள், கோவில்கள், கல்வெட்டுக்கள், பாரம் பரிய கலைகள் பற்றிய செய்தி, புகைப் படங்களை, வழித்தடங்களை எங்களுக்கு அனுப்புதல், எல்லாரும் இணைந்து சீர் செய்தல்.

★ உங்கள் ஊரில் தன்னார்வக் குழுக்களை ஏற்படுத்தி பண்டை பழம்பெரும் சின்னங்கள், கோயில்களை சுத்தமாக்கவும், பாதுக்காக்கவும் இளைஞர்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தில் உறுப்பினராய் சேர:

நம் பழங்கலை, வரலாறு, பாரம்பரியம் கட்டிக்காக்கப்பட வேண்டும் என விரும்புவோர், ஆர்வலர்கள் கீழ்கண்ட பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

இயக்கத்தில் உறுப்பினராகலாம். இது தன் னார்வப் பணியே, கட்டணங்கள் ஏதும் கிடையாது.

நீங்கள் பழங்கால கோவில்களில் உழவாரப்பணி அல்லது சீரமைக்கும் பணி செய்பவரானால், உங்களைப் பற்றிய செய்தி, குழுவினைப் பற்றிய செய்தி மற்றும் முகவரி, தொலைப்பேசி எண், மின்னஞ்சல், தொடர்பு கொள்ள வேண்டிய முக்கியமான நபர்களின் பெயர், அவர்களது தொடர்பு விபரம் போன்றவற்றை எழுதினால், எங்கள் இணைய தளத்தில் அச்செய்திகளை வெளியிடுவோம்.

நம்மால் முடிந்த பொருளுதவி செய்தல்

வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கும், நிறுவனங்களுக்கு, பொருளுதவி செய்பவர்க்கு இத்தகைய பாரம்பரிய சின்னங்களை பேணி காக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்து, அவர்களை யும் இம்மாபெரும் பணியில் ஈடுபட வைத்தல். பள்ளி சிறுவர்கள், நம் வீட்டினரை, வெளி நாட்டவரை "பாரம்பரிய சுற்றுலா" அழைத்துச் செல்லல்.

தொடர்புக்கு

26/43, ஜானகிராமன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033.

தொலைபேசி: 91–44–24810446

மின்னஞ்சல்: reach.foundation.india@gmail.com.

இணையதளம்:

www.conserveheritage.org

http://templesrevival.blogspot.com

http://reachhistory.blogspot.com

வர, அவரிடமும் திருமங்கை ஆழ்வார் வழிப்பறி செய்ய, திருடியதை எடுக்க முடியாத நிலையில், "மந்திரம் செய்தீரோ" என வினவ, பெருமாள், ஆழ்வாரை அழைத்து, "ஓம் நமோ நாராயணாய" என்ற எட்டு எழுத்து மந்திரத்தை உபதேசிக்க, ஞானம் பெற்ற ஆழ்வார் அகம் மகிழ்ந்து "நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா எனும் நாமம்" என்று பாடினார்.

வைணவத்தின் மூன்று சூரியர் களில் இவரும் ஒருவர். திருமங்கைஆழ்வார், நம்மாழ்வார்

வைணவத்தின் விடிவெள்ளி

திருமங்கையாழ்வார்

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் அழியா அழகுள்ளவை. பக்தர்களை நல்வழி படுத்தி பெருமாளிடம் சேர்க்கும் ஆற்றல் பெற்றவை. வாள்வலியால் மந்திரம் கொண்டவர், காதலால் கதி பெற்ற திருமாலையே ஆசார்யானாக கொண்டவர்.

சோழ மண்டலத்தில் திருமங்கை என்னும், திருவாலி திருநகரி என்ற தலத்திற்கு மிக அருகிலுள்ள குறையலூரில் கள்ளர்கடியன் தலைவனாக, இருந்த நீலன் என்பவருக்கு மகனாகப்பிறந்தவர். நீலன் மகன் நீலன் என்ற பெயரில் இளமையிலேயே எல்லாக் கலை களிலும் வல்லவராகி, சோழ மன்னனின் சேனாதிபதியாக, பணி ஏற்று திறம்பட செயல் பட்டார். இவரது திறமையை பாராட்டி, சோழமன்னன் இவரை மங்கை நாட்டிற்கு மன்னராக்கினார்.

ஒரு சமயம் மன்னன் இவரிடம் வரிப் பணம் பெற முடியாததால், இவரை சிறை யிட்டான். காஞ்சி பெருமானின் பேரருளால் வேகவதி ஆற்றில் மணலில் புதையல் கண் டெடுத்து வரிகட்டினார்.

குமுதவல்லி என்ற பெண் நல்லாளை திருமணம் செய்து, திருநறையூர் நம்பியிடம் உபதேசமும் பெற்றார்.

ஒரு சமயம் பெருமாள் இவரை சோதிக்க, லட்சுமி தேவியுடன், மணமக்கள் கோலத்தில்

இராமானுஜர் ஆகிய மூவருமே வைணவத் தின் மூன்று சூரியர்களாக, வைணவ உலகம் போற்றி மகிழும். அதிகமான திவ்ய தேசங்கள் திருமங்கையாழ்வாராலேயே மங்களா சாசனம் செய்யப்பட்டவை. 108 திவ்ய தேசங் களில் 86 திவ்ய தேசங்கள் திருமங்கையாழ்வா ரால் மங்களாசாசனம் செய்யப்பட்டவை யாகும்.

"கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன்
கண்டவா திரிதந்தேனேலும்
தெள்ளியேன் ஆனேன் செல்கதிக்கு அமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்"

என்ற பாசுரத்திலே, பழைய வாழ்வையும் முரண்பட வைத்து காட்டுகிறார் ஆழ்வார். பெருமாள் இவரிடம் "நீர் உமது பரிவாரத்து டன் நம் திருப்பதிகள் தோறும் சென்று பாடி வாரும்" என பணித்தாராம். ஆழ்வாரும் வடக்கே பத்ரிநாத் முதல் தெற்கே திருக்குறுங் குடி வரை யாத்திரை செய்து, பெருமாளை பாடிப்பரவி அகமகிழ்ந்தார்.

"நான் உலகப் பொருளை திருடிய கள்வன், பெருமாளே நீ, இந்த கள்வனின் உள்ளத்தை கவர்ந்த கள்வன்" எனவே "நீயும் கள்வன் நானும் கள்வன்". இதுவே உன் மந்திர உப தேசத்தின் மகிமை என தெளித்து அந்த தெளிவால் எழுத பாடல்கள் மலர்ந்தன.

பெ.இராமநாதபிள்ளை, செயல்அலுவலர்.



"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கல்வியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா! என்னும் நாமம்"

என்று பாடினார்.

கடந்த காலத்தை நினைத்து வருந்தி, "பாவியேன் உணராது எத்தினை பகலுரும் பழுதுபோய் ஒழிந்தன நாட்கள்" என்றும் ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் ஒழிந்தன கழிந்த அந்நாட்கள் என்று வருந்தி பாடினார்.

பெருமானின் திருவருள் பெற்றதும் "நன்று நான் உய்ய நாள் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என அக மகிழ்ந்து பாடினார்.

பெருமாளின் திருவருளால் பத்ரிநாத் யாத்திரை செய்த திருமங்கை ஆழ்வார், அங்கு அருள்புரியும் பெருமாளை உடலில் வலு இருக்கும்பொழுதே தரிசித்து விட வேண்டும் என நகைச்சுவையுடன் கூறு வார்.

"முற்றமூத்துக்கோல் துணையா முன்னடி
நோக்கி வளைந்து
இற்றகால் போல் தள்ளிமேள்ள இருத்தங்கு
இளையாமுன்! என்றும்,
முதுகு பற்றிக் கைத்தலத்தால்
முன்னொரு கோல் ஊன்றி
விதிர் விதிர்த்துக் கண் மூத்தவாறு என்று
இளையவர் ஏசாமுன் என்றும்,
எய்த்த சொல்லோடு ஈளை ஏங்கி இருமி
இளைத்து உடலம்
பித்தர் போலச் சித்தம்வேறாய்ப் பேசி அயராமுன்"

என்ற பாடலில் முதுமை காலத்தில் பத்ரிநாத் செல்வதற்கு உடலில் வலிமை இருக்காது என்பதால் இளமை காலத்தே பத்ரிநாத் செல்ல பக்தர்களுக்கு கூறும் அறிவுரை எக்காலத்தவர்க்கும் பொருத்த மாய் அமைந்துள்ளது.

ஆழ்வார் வடவேங்கடவனை சரண் அடைந்து, தம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று பாடும் பாடல் நெஞ்சை உளுக்கும்

"தாயே தந்தையென்றும் தாரமே கிளை
மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன் உன்னைக் காண்பதோர்
ஆசையினால்
வேயேய் பூம்பொழில் சூழ்விரையார்
திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாள்
என்னைக் கொண்டருளே"

என்ற பாசுரம் உள்ளத்தை உருக்கும்.

திருமங்கை ஆழ்வார் பெரிய கோவிலுக்கு மதில் எழுப்பி முடித்ததும் ஸ்ரீ ரங்கராஜனை வணங்கி, "சுவாமி தேவரீருக்குத் தங்கத்தால் மதில் கட்ட வேண்டியிருக்க சக்தியற்ற நான் கல்லினால் கட்டினேனே என வருந்திட உடனே ஓர் வானொலி பிறந்தது" ஆழ்வாரே உம்முடைய தங்கமான உள்ளத்தைப்போல் நீர் செய்த கைங்கர்யங்களையும் நாம் தங்கமாகவே அங்கீகரித்தோம் என்று, சொல்லவும், விமானம், மண்டபம் எல்லாம் ஒரு கணம் தங்கமாகவே ஒளி வீசினவாம்.

ஆழ்வாரும்,

"செம்பொன் ஆகம் மதில் சூழ்ந்து அழகார்
தென்னரங்கமே என்றும்,
ஆயபொன்மாமதில் சூழ்ந்து அழகார்
தென்னரங்கமே" என்று பாடினாராம்.

மேலும், திருமாலுக்கு தொண்டு செய்வதைவிட திருமாலடியாருக்கு தொண்டு செய்வதே சிறந்தது.

பகவத் கைங்கர்யத்தை விடப் பாகவத கைங்கர்யமே சிறந்தது என்ற கொள்கை ஆழ்வாருக்கு உண்டு.

"ஞானத்தின் ஒளி உருவை
நினைவார் என் நாயகரே!—என்றும்
சொண்டாடும் செஞ்சுடையார்
அவர் எங்கள் குலதெய்வமே!—என்றும்
எம்பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும்
என்மனத்தே இருக்கின்றாரே—என்றும்
எம்பெருமான் தாளை நாளும்
சிந்திப்பார்க்கு என் உள்ளம்
தேனூறி எப்பொழுதும் தித்திக்குமே!—என்றும்
பேராளன் பேரோதும் பெரியோரை ஒருநாளும்
பிரிகிலேனே"

என்று விரதம் பூண்டு, அவர்களுக்காக, எல்லாவித தியாகமும் செய்ய காத்திருந்தார். அவர் உகந்த கைங் கர்யமே பரம புருஷோர்த்த மாக மதித்தவர் இவர்.

மேலும் பெருமாளை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் வைத்து இவர் பாடிய பாசுரங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

நாயகனை பிரிந்த நாயகியாக தன்னை பாவித்து, தோட்டத்து வண்டுகளிடம் தம் எண்ண கருத்தினை வெளியிடும்படி பாடிய பாடல்கள் அற்புதம்.

"பூவிரிய மது நுகரும் பொறிவரிய சிறுவண்டே!
தீவிரிய மறை வளர்க்கும் புகழாளர் திருவாலி
ஏவரி வெஞ்சிலையானுக்கு என் நிலைமை
உரையாயே"
"செங்கால மட நாராய்! இன்றே சென்று
திருக்கண்ணபுரம்புக்கு என் செங்கண்மாலுக்கு
என்காதல் என் துணைவர்க்கு உரைத்தியாகில்
இது ஒப்பது எமக்கு இன்பமில்லை"

என்று நாரையிடம் வேண்டி இப்படி பாடுவார்.

காக்கையிடம்,

"கரையாய் காக்கைப் பிள்ளாய்!
கருமாமுகில் போல் நிறத்தன்
உரையார் தொல்புகழ் உத்தமனைவரக்
கரையாய் காக்கைப் பிள்ளாய்"

என்றும்,

கிளியிடம்,

"சொல்லாய் பைங்களியே! சுடராழி வலன் உயர்த்த
மல்லார்தோள் வடவேங்கடவனை வரச்
சொல்லாய் பைங்கிளியே"

என்றும்,

பூங்குயிலிடம்

"கூவாய் பூங்குயிலே! குளிர்மார் நடுத்துகந்த
மாவாய் கீண்ட மணிவண்ணனை வரக்கூவாய்"

— என்பார்.

இப்பாசுரங்கள் உயிர்துடிப்பு உள்ளவை.

தன் பெண் படும்பாட்டை பெருமாளிடம் முறையிடுவதாக தாய்ப்பாசுரம் பாடியுள்ளார்.

"பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாரைபேணாள்
பனிநெடுங்கண்ணீர்த்ததும்பப் பள்ளிகொள்ளாள்
எட்டுணைப்போது என் குடங்காலிருக்க கில்லாள்
எம்பெருமான் திருவரங்கம் எங்கே!

— என்றும்,

தலைவி தன் காதலனை பற்றி தோழியிடம் கூறுகையில்,

"...........என் மனமும் கண்ணும் ஓடி
கம்பெருமான் திருவடிக் கீழ் அணைய இப்பால்,
கைவளையும் மேகலையும் காணேன், கண்டேன்
கனமகரக்குழையிரண்டும் நான்கு தோளும்!
எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில்? என்றேற்கு
இதுவன்றோ எழில் ஆலி என்றார் தாமே" என்று
தன் அனுபவத்தை கூறும் அழகே அழகு.

நம்மாழ்வார் பாடிய பிரபந்தங்கள் நான்கு வேதம் என்றால், திருமங்கை ஆழ்வார் பாடிய பிரபந்தங்கள் ஆறு அங்கங்களாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த பிரபந்தங்களை நாமும் பாடி, பெருமாளின் திருவருள் கடலில் மூழ்கி திளைப்போமாக!

திருத்தாண்டக அருளிப்பாடுகள்

—முனைவர். அ.அறிவொளி

ஒருபெண் புகுந்த வீட்டினர் அறியாது லிங்கத்தை வழிபட்டுவந்தாள். அவள் கணவன் அதைக் கண்டு அந்த லிங்கத்தைக் கிணற்றில் போட்டுவிட்டான். எந்த வகையிலும் அவள் வழிபாடு நடைபெறவில்லை.

மாட்டுத் தொழுவத்தில் கன்றை, மாட்டைக் கட்டுவதற்கு ஒரு மரக்கொம்பு (நடுதறி) நட்டிருப்பார்கள். அதையே பாணலிங்கமாக எண்ணி அதற்குத் திருநீறுசாத்திக் கும்பிட்டபின் கழுவி விடுவாள்.

இதையும் கண்ட கணவன் அந்த மரத்தையும் வாளால் வெட்டினான். அந்தப்பகுதியில் சிவமாகிய சோதி எழுந்து நின்றது. எதைக் கடவுளாகக் கருதினாலும் அதில் அவர் வந்து புகுவார் என்பது இந்தவரலாறு.

இதை அந்தவூர்த் திருத்தாண்டகத்தில் அப்பரடிகள் பாடினார்.

கன்று கட்டும் ஆப்பில்(கம்பு) தோன்றிய கடவுள் அருளாள் அவ்வூரே கன்றாப்பூர் என்று பெயர் பெற்றது.

"காதன்மையால் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே"

—என்று பதிகம் தோறும் முத்திரைத் தொடராகப் பாடினார்.

காதல் உள்ள நெஞ்சில் சோதி வெளிப்படும். கன்றாப்பூர் போல என்பதே அப்பாடல் குறிப்பாகும்.

பாட்டின் பயனைக் குறிக்கவும் திருத்தாண்டக ஈற்றடியைக் கையாண்டுள்ளார்.

கீழ்வேளூர் சிக்கலுக்கு மேற்கே 8 கி.மீ.ல் உள்ளது. அவ்வூர்ச் சிவன்பெயர் கேடிலியப்பர் என்பதாகும். அவரை வணங்குவார்க்குக் கேடு வாராது என்ற பயனை பதிகம்தோறும் பாடினார்.

"...கேடிலியை நாடுமவர் கேடிலாரே"

—என்பது அந்த முத்திரைத்தொடர்.

வேதாரண்யத்தில் மறைக் கதவைத் திறக்க அப்பரடிகள் பல பாடல் பாட வேண்டியிருந்தது. அதைச் சாத்துவதற்கு ஞானசம்பந்தர் ஒருபாடலில் நிகழ்த்தினார். கதவு திறப்பதில் கடவுளுக்கு விருப்பம் இல்லாமையால் பல பாடல் பாட நேர்ந்ததோ என்று அப்பர் வருந்தினார்.

கடவுளிடம் கேட்டுப்பாடியிருக்கலாம் அல்லது வேண்டாம் என மறுத்திருக்கலாம். இப்படிப் பலவாகச் சிந்தித்து உறக்கமின்றிக் கிடந்தார். அப்போது சிபெருமான் காட்சி தந்து வாய் மூருக்கு வாஎன்று அழைப்பதை உணர்ந்தார்.

ஞானசம்பந்தரிடம் கூட இதைச் சொல்லாமல் புறப்பட்டார். இவருக்கு வழிகாட்டுவதுபோல் சிவபெருமான் முன்னால் நடக்கிறான்.

இவன் சிவன் தானா? என்று ஒவ்வொர் அடையாளமாகப்பார்த்து உறுதிசெய்கிறார்.

பிறகு ஒரு கோயிலிலே சிவன் புகுவதைக் கண்டுதானும் போனார் போகிறவரைக் கோயிலாகத் தென்பட்டது வெறும் வெளியாகக் கிடந்தது.

பொய்க்கோவில் காட்டினாயோ என்று சிணுங்கிப் பாடுகிறார். ஆனால் தமக்கு வழி காட்டி முன்னால் நடந்தது சிவனேதான் என்று அவர் அடையாளம் எல்லாம் இவர் மனத்தில் நிழலிடுகின்றன.

இதைத் திருவாய்மூர்த்தி திருத்தாண்டவமாகவே பாடினார்.

அடியார்கள் பாடிப்பரவுவதும்—பக்தர் கூட்டம் ஆழ்வதும்—சிவபூதகணங்கள் மொய்த்திருப்பதும்—நந்தி வாசிக்கும் மத்தளமும் அதன் ஓசை அதிர்கிறதும்—கையில் அனல் ஏந்தியிருப்பதும்—சடையில் கங்கையும் பாம்பும்—கொக்கு இறகும்— கொன்றைப்பூவும்—கையில் கொய்த பிரம்மன் தலையும்—இப்படிச் சிவனின் பல்வேறு அடையாளங்களும் சொல்கிறார்.

பத்துப்பாட்டிலும் இவையெல்லாம் கண்டேன் கண்டேன் என்று அடுக்குகிறார்.

இவ்வளவும் மாயமாகி விட்டன என்பது அப்பர் அடிகளின் வருத்தம். இதோ அந்தப் பாடல்களில் ஒன்று பாட அடியார் பரவக் கண்டேன்

பக்தர்கணம் கண்டேன்
மொய்த்த பூதம்
ஆடல்முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல் கண்டேன்
கங்கையாளைக்
கோடல் அரவார் சடையில் கண்டேன்
கொக்கின் இதழ் கண்டேன்
கொன்றைகண்டேன்
வாடல் தலையொன்று கையில்
கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்டவாறே"

இத்திருத்தாண்டகத்தின் வருணனை யாவும் அப்பர் நேரில் கண்டதாகேவே பாடியதை உணர்க.

திருவானைக்கா, நீர் என்னும் பூதத்துக்குரிய தலம். அங்கே லிங்கத்தின் கீழே நீர் ஊறும். அதை நீர்த்திரள் லிங்கம் என்பர். அதாவது அதுவே சிவம் என்பது பொருள். அங்கேபாடிய திருத்தாண் டகத்தில் சிவனைக் கண்டேன், உணர்ந்தேன், நினைந்தேன் என்று பிற இடங்களில் பாடுவது போல்பாடவில்லை.

அந்த நீராகிய சிவத்தில்—சிவமாகிய நீரில்—ஆடினேன் என்று ஐக்கியப்படுத்திப் பாடுகிறார்.

"தென் ஆனைக் காவானைத் தேனைப் பாலை
செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே"

—என்ற முத்திரை வாசகத்தை வைத்துப் பாடி பதிகம் முழுதும் பரப்புகிறார்.

அரசனே சமணசமயத்தில் ஈடுபட்டதால் சைவராகிய பலரும் கோயில் வழிபாடு முடிக்க முடியவில்லை. தன்னைக் காஞ்சியில் துன்புறுத்திய நினைவில் மதுரைக்குப் போகவில்லை போலும். அதனால்தான் ஞான சம்பந்தர் மதுரைக்குப் புறப்படும்போதும் அப்பரடிகள் மறுத்தார்.

சிறிய குழந்தை சமணர்களால் வருந்த வேண்டாம் என்பதே அவர் நோக்கம். ஆனால் ஞானசம்பந்தர் கோளறுபதிகம் பாடி இறையருளால் அங்கு போகத் துணிந்து விட்டார். மதுரை சென்று எல்லாம் சிறப்பாக வெற்றிப் பெற்றுத் திரும்பிய பின் அப்பரடிகளிடம் கூறி பாண்டிய நாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளச் சொன்னார். தரிசிக்காத பல தலங்களையும் தரிசிக்கும் விருப்பத்தில் அப்பரடிகள் புறப்பட்டார்.

இதனால் வேறு பதிகங்களில் காணப்பெறாத முத்திரைத் தொடர். மதுரைத் திருத்தாண்டகத்தில் வருகிறது.

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானை கருத்தறிந்து முடிப்பான் தன்னை
தூயானை தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்ற என்
தாயானைத் தவமாய தன்மை யானை
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திரு ஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே"

—என்பதில் ஈற்றடியைக் காணுக.

இதுவரையில் செய்யாதசெயல், கிடைக்காத வாய்ப்பு இப்போதுமட்டும் ஞான சம்பந்தரால் தமக்குக் கிடைத்தது என்பதால் தான் "பெற்றேன்" என்று பாடுகிறார்.

எத்தனையோ முறை சிவனடியைச் சிந்தித்தவர் கண்டவர் இப்படி ஏன்பாடுகிறார்?

மதுரையில் வந்து அத்திருவடியை வணங்கும் பேறு இப்போதுதான் கிடைத்ததாகையால் "திருஆலவாய்ச் சிவனடியே"—என்று அழுத்தமாகக் கூறுகிறார்.

திருச்சியிலும் சமணர்கள் மிகுந்திருந்தனர். பல்லவன் சைவராக மாறிய பின் திருச்சிக் குடவரைக் கோயில் மலைக்கோட்டை எடுத்ததால் அறியலாம்.

இங்கே வந்தபோது திருஎறும்பியூர் தரிசிக்காமல் போயிருக்கிறார் அப்பர். வாய்ப்புக் கிடைத்ததும் முன்பு பெறாத பயன் பெற்றதால்,

"தென் எறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்ற அடையப் பெற்றேன்
நானே"

—என்று பாடுகிறார்.

இங்கும் அடையப் பெற்றேன் என்ற முத்திரைச்சொல் காணலாம். இப்படித் தாண்டகத்தில் மேலும் பல அருளிப்பாடுகளை நாம் காணலாம்.

சென்ற இதழ் தொடர்ச்சி..

வேலும் மயிலும் துணை
கந்தர் அனுபூதி

–டாக்டர் சரசுவதி இராமநாதன்

'நான்' 'அகம்' என்ற எண்ணம் போனால் அங்கே குகன் அமர்வான். அடியார் இதயக்குகையில் அமர்பவன் குகன். ஒருவன் கடவுளிடம் வேண்டும்போது என்னையும், என் மனைவியையும், என் குழந்தைகளையும், என் மாப்பிள்ளையையும் காப்பாற்று என்று வேண்டக்கூடாது. மனது விசாலம் அடைய வேண்டும். விருந்து போடக் கற்றுக் கொள்ள வேண்டும். தனி மனிதனுக்கு கொடுப்பது ஈகை. பொது மக்களுக்கு கொடுப்பது ஒப்புரவு. மனம் விரிய விரிய இப்பண்புகள் வளரும். மனிதனுக்கு காம உணர்ச்சி பிறப்பிலிருந்து உள்ளது. விலங்குக்கும் உள்ளது. மனைவியை இழந்த வயதான ஒருவரைப் பார்த்து 'இன்னொரு கல்யாணம் செய்து கொள்ள வேண்டியது தானே ?' என்று கேட்டால், அதற்கு அவர் 'எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்' என்று தான் கேட்பாரே ஒழிய 'எனக்கு இந்த வயதில் கல்யாணம் வேண்டாம்' என்று சொல்லுவதில்லை. காமத்திற்குப் பிறகு வருவது தான் பொருள் அறிவு. இப்போது சிறு குழந்தையாக இருக்கும்போதே பொருள் அறிவு தெரிந்து விடும்.

சிலபேர் பொருள் அறிவு வந்தவுடன் காமத்தை விட்டு விடுகிறான். சிலருக்கு இந்த இரண்டுமே உள்ளது. நாம் தேடி வைத்த செல்வம் நம்மோடு வராது. தர்மத்தை தர்மத்திற்காக பண்ணுவது மோட்சத்திற்கு செல்லும் வழியைக் கொடுக்கும். காமம் என்பது மனதால் கெடுவதும் தான். 100க்கு 99 பேர் மனதால் கெட்டவர்கள். காம விகாரம் இல்லாத மனது ஒன்று உள்ளதா என்று சந்தேகம். மனது சாக்கடையாக இருக்கிறது. மனைவி மக்கள் என்ற வலையிலே இருந்து அழியக்கூடாது. "மட்டூர் குழுல் மங்கையர்" என்றால் அழகையே வியாபாரம் செய்யும் பெண்கள். அந்த வீட்டிற்கு போகிறவனைப் பிணம் என்றே திட்டினார் திருவள்ளுவர். காசுக்காக உடலை விற்கிற பெண்களுக்கு மனதில் அன்பு என்ற ஈரமே இருக்காது. ஆடை அணிகலன்கள், பார்வை ஆகியவை அவர்களுக்கு கருவி என்று கூறினார் பரிமேலழகர். மனம் ஊஞ்சல்போல் அலைகிறது. இந்த ஊஞ்சல் படுகிற உடலைவிட்டு எப்போது நீங்கப் போகிறேன். எதற்கும் பயமில்லாதவன், ஆண்டவன். நமக்கு பயமில்லாத நேரமே இல்லை. அவன் நிராகுலன். ஆகவே, மட்டூர் குழல் மங்கையர் மையல்வலைப் பட்டுசல் படும் பரிசென்றொழிவேன். 'நிட்டூர நிராகுல நிர்ப்பயனே' என்று ஏங்குகிறார்.

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூடு அற, வேல் சைலத் தெறியும்
நிட்டூர, நிரா குல, நிர்ப்பயனே. – 9

முருகனுடைய அடியார்களுக்கு பக்தர்களுக்கு எம பயம் கிடையாது. "எருமை மாட்டில் வரும் எமன் வரும் போது என் முன்னே முருகனாகிய நீ வர வேண்டும். அழகான தோகை உள்ள மயில் மீது வந்து என் முன்னே நிற்க வேண்டும்" என வேண்டும் ஆண்டவனின் அடியார்களுக்கு எம பயம் நீங்கி விடும்.

ஒருவரைச் சுண்ணாம்புக்காளவாயில் மன்னன் போட்டான். ஒரு வாரம் போட்டான். அவரை ஒரு வாரம் கழித்து எடுக்கப் போனான். ஆனால் அவரோ, 'நான் ஏறி விடுகிறேன்' என்று கூறி வந்தார். முன்னே இருந்ததை விடத் தேஜஸ் கூடியிருந்தது. 'சுண்ணாம்புக் காளவாயில் எப்படி இருந்தீர்' என்று அரசன் கேட்டார். அதற்கு அந்த அடியார் கூறினார். 'சுண்ணாம்புக் காளவாயில் எப்போது பார்த்தாலும் வீணையின் நாதம் கேட்டது. முழுச் சந்திரனின் நிலா வீசியது. தென்றல் வீசியது. பலாப்பழம், மாம்பழம் கிடைத்தது. நறுமணம் உள்ள பூக்கள் மணம் வீசின' என்றார்.

அப்பரடிகளே அந்தப் பெரியவர். பல்லவ மன்னனை எதிர்த்து 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று உரிமைப் பிரகடனம் செய்த வீரர் அவரே!.

"மாசில் வீணையும், மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே”

நீ போட்டது ‘சுண்ணாம்புக் காள வாயில்; ஆனால் நான் என் பக்தியினால் அதை சிவபெருமானுடைய அடியாக மாற்றிக் கொண்டேன். ஆகவே இந்த ஐம்புல இன்பங்களையும் பெற்று வந்தேன் என்றவர் அப்பரடிகள்.

அதுபோல, முருகனடியார்களுக்கு எம பயம் கிடையாது. பாயில் கிடக்காமல், உறவினர் வந்து உபசாரம் பண்ணாமல், எப்படிப் போகப் போகிறோமோ என்ற எண்ணம் இல்லாமல், போய்ச் சேர வேண்டும். எவனுக்குத்தான் இந்த மரண பயம், வருத்தம், இருக்காது? சாவு என்பது நிச்சயம் வரப்போகிறது.

ஆகவே நீ இப்போதே எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா? சாவதற்கு முன் சொல்லி வைப்பது போல் சொல்லி வைக்கிறார்.

“கார்மாமி சைக் காலன்வரின், முருகா நீ மயில் மீது வந்து நிற்க வேண்டும்.”

முருகப்பெருமான் அடியார்கள் முன் எமன் வர மாட்டான். அப்படி எமன் வந்தால் முருகன் முன் வந்து நிற்பான். எமன் தெரியாமல் இருக்க நீ (முருகன்) அழகான தோகை விரித்த மயில் மீது வர வேண்டும். அந்தத் தோகை எருமையை மறைக்க வேண்டும்.

முருகனாகிய நீ எமனை மறைக்க வேண்டும். நான் தான் முருகன் என்று தெரிவித்துவிட்டு வர வேண்டும். திடீரென்று முருகன் நம்முன் தோன்றினால் நமக்கு யார் என்று தெரியாது. ஆகவே தான் ‘முருகன் என்று தெரிவித்து விட்டு வரவேண்டும்’ என்று கூறினார். ஊனக்கண்ணால் பார்க்க முடியாது. ஞானக் கண்ணால் தான் பார்க்க முடியும். ஆண்டவன் எப்படி வேண்டுமானாலும் வருவான்.

பன்றிக் குட்டிக்குப் பால் கொடுக்கப் பன்றியாக வந்தான். தாய் பன்றியாக வந்தால்தான் அந்த பன்றிக்குட்டிக்கு திருப்தி. ஆகவே தான் தாய்ப் பன்றியாக வந்தான். ஒருமுறை ஒரு பக்தன் கனவில் நாளை உன் வீட்டிற்கு வருவேன் என்று ஆண்டவர் கூறினார்.

மறுநாள் காலையிலேயே தயார் நிலையில் பக்தன் வீட்டில் எதிர்பார்த்து கொண்டிருந்தான். காலை 6 மணிக்கு ஒரு சொறிநாய் வந்தது. ஓட ஓட விரட்டினான். மதியம் ஒரு கழுதை. ‘சீ’ என்று விரட்டி விட்டான். மாலையில் ஒரு தொழுநோயாளி வந்தான். அவனையும் விரட்டி விட்டான். ஆண்டவன் வரவில்லையே என்று கருதி ஏங்கி அவன் தூங்கிவிட்டான். அன்று கனவில் ஆண்டவன் தோன்றினான்.

‘நீங்கள் ஏன் வரவில்லை?’ என்று கேட்டான். அதற்கு ஆண்டவன் பதில் கூறினான். ‘காலையில் சொறிநாயாக வந்ததும், மதியம் கழுதையாக வந்ததும், மாலையில் தொழுநோயாளியாக வந்ததும் நானேதான்.

நான் எல்லாவற்றிலும் இருக்கிறேன். ஆகவே அந்த உருவங்களில் வந்தேன்’ என்று கூறினான்.

ஆகவே, புரியாத எமக்கு, அவன் தன்னை அறிமுகப் படுத்திய வர வேண்டும் என்கிறார்.

“கார்மாமிசை காலன்
வரின் கலபத் தேர்மா
மிசைவந் தெதிரப்படுவாய்
தார்மார் புவலாரி, தலாரி, எனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே”
– 10

முருகன் மாலையணிந்த மார்புடையவன்; காத்தலுக்கும் படைத்தலுக்கும் உரியவன்.; முருகனை எதிர்த்துச் சூரன் மாமரமாக நின்றான்.

அந்த சூரனை அழித்த முருகப்பெருமானே என்று அழைக்கிறான். மரணத்தை மறந்து இருக்கிறோம். அதனால்தான் வாழ்கிறோம். மரணத்தை நினைத்துக் கொண்டிருந்தால் வாழமுடியாது. சாகிறவர்களைப் பார்த்து சாவு நினைவு படுத்தப் படுகிறது. செத்தவனை சாகப் போகிறவன் சுமக்கிறான். மரணம் அடிக்கடி நினைவுபடுத்தப்படுகிறது.

மரணமடைந்த பின்பு துன்பம் இல்லை. இருக்கிறவனுக்குத் தான் கஷ்டம். உலகைவிட்டுப் போனவனுக்கு கஷ்டம் இல்லை. அதுதான் சுடுகாடு என்று பெயர். எல்லாவற்றையும் சுட்டுச்சாம்பலாக்கும் காடு அது.

மரண பயம் நீங்க வேண்டுமானால் பக்தி வேண்டும். நிஜமான பக்தனுக்கு மரண பயம் இல்லை. மிச்சமில்லாமல் அன்றன்றைக்கு காரியங்கள் முடியுமானால் மரண பயம் கிடையாது. ஆனால் நாம்தான் மிச்சமின்றி வாழ்வதில்லையே! ‘நாளை’ என்று இருக்கிறோம்.

ஒரு வயதானவர் “எப்போ அழைக்கப்போகிறானோ எப்போ போகப் போகிறோமோ, அழைக்க மாட்டானா” என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

அப்போது எமன் வந்த உடன் அவர் கூறுகிறார். “என்னுடைய கொள்ளுப் பேத்திக்கு திருமணம் ஆகப் போகிறது. அதைப் பார்த்து விட்டு வருகிறேன். எனக்கு இப்போது தான் கேட்ரேக்ட் ஆபரேஷன் ஆகி உள்ளது” என்று கூறுகிறார். போக மனது வரவில்லை. அபிலாசையால் நமக்கு ஏதோ மிச்சம் இருக்கிறது என்று நினைக்கிறோம். இந்த எண்ணமில்லாததுதான் ஞான வாழ்க்கை. அது கிடைக்க இப்பாடல் அறிவுகொளுத்துகிறது. பாசம் அறுபட்டு, மோகம் முடிவுற்று, ஞானம் பிறந்து, இயமனைத்துணிவுடன் எதிர் கொள்ள இப்பாடலைத் தினமும் பாடலாம்.

சிவமயம் தோற்றுவாய்

அருள்திரு மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய நூல்கள் இரண்டு. பாடல்கள் 1056.

நூல்: திருவாசகம், திருகோவையார்.

பாடல்:

கலிவெண்பா 1, அகவல் 3, சதகம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 652, கோவை 400, ஆக மொத்தம் 1056. ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன, திருவாசகத்தின் ஏழாவது பதிகமாகிய திருவெம்பாவையும் திருக்கோவையார் என்ற நூலுமே.

'திருவெம்பாவை' என்ற பதிகம் திருவண்ணாமலையில் அடிகள்



திருவெம்பாவை:

கன்னிப்பெண்கள் மட்டுமே எழுப்பப் படல். சிவனடியார்களே கணவர்களாக வரவேண்டல். நீராடல் காட்சியும் அதன் வருணணை களும் உள.

திருப்பாவை:

திருமணம் ஆன நப்பின்னையும் நந்தகோபன் வாயிற் காப்பாளராகிய ஆண்களும் எழுப்பப் படல். கடவுளே கணவனாக வரவேண்டல். நீர்த் தடங்களுக்கே செல்லவில்லை.

நீராடலும் நிகழ வில்லை. 'நீராடல்'

பாவையும் கோவையும்

எழுந்தருளியிருந்த காலத்துப் பாடப்பெற்றது. கன்னிப்பெண்களின் நீராட்டைப் பார்த்துப் பாடியது அன்று. அந்நகரில் வாழ்ந்த சைவக்கன்னியரின் இயல்புகளை நன்றாக அறிந்த மணிவாசகர் கற்பனையாகப் பாடியது. இவ்வுண்மையை வாதவூரடிகள் புராணம் இயம்புவது,

"அன்னவர் இயல்பு கண்டர்
ஆங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம்பாவை
வாசகம் பேசிப் பின்னர்க்
கன்னியர் பாடி யாடும்
கவின்கொள் அம்மனை கண்டு அன்னார்
பன்னிய பாடலாக அம்மனைப்பாடல் செய்தார்".

–திருவம்பலச் சருக்கம்–41.

இருபாவை ஒப்பு நோக்கு:

வைணவப் பாவையாகிய 'திருப்பாவையும்' சைவப் பாவையாகிய 'திருவெம்பாவையும்' தமிழ் யாப்பு ஒற்றுமையில் ஒன்று என்றாலும் பொருள் தன்மையால் பெருத்த வேற்றுமை உடைய சில வற்றை மட்டும் ஈண்டு நோக்குவது வேறுபாட்டைத் தெளியத் துணை செய்யும்.

என்றது சம்சுலேசணம் என்பார் வைணவ வியாக்கியான கர்த்தர் பெரியவாச்சான் பிள்ளை.

விரிவு அஞ்சி ஈண்டு இவ்வாராய்ச்சி இத்துடன் விடப்பட்டது. நாம் எடுத்துகொண்ட பொருள் 'பாவையும் கோவையும்'.

ஆய்வின் நோக்கம்

'வாசகம் பாடிய வாயால் கோவை பாடுக' என்று இறைவனைக் கேட்டிலர். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்றார்.

திருவாடுதுறை ஆதின சித்தாந்தப் பேராசிரியர்
சித்தாந்த வித்யாநிதி சு.சண்முகவேல்

இறைவன் விண்ணப்பம் ஏன் இவ்வாறு அமைந்தது என்பதைச் சிந்திப்பதே இவ்வாய்வின் மையக் கருத்து.

இல்லறமும் துறவறமும்

சைவ மரபில் வந்த கன்னிப் பெண் சிவனையே வழிபடு கடவுளாகக் கொண்டிருப்பாள். அவள் மனம், வாக்கு, காயம் மூன்றும் சிவன்பாலே நிற்கும். இப்படிப்பட்ட இலக்கணங்கள் கொண்டவள், கன்னியாகவே வாழ்நாளைக் கழிக்கக் கூடாது என்பதே சைவக்கோட்பாடு. பெண்கள் துறவு மேற்கொள்ளல் கூடாது. துறவு என்பது ஆண்களுக்காக விதிக்கப்பட்ட அறம் என்பதே சைவக்கொள்கை. ஆகவே தான் திருவள்ளுவர் துறவறவியலில் ஆண் துறவிகளை மட்டுமே பேசுகிறார் பெண் துறவிகளைப் பற்றிக் குறள் பேசவில்லை. பெண் தாய்மையை அடைய வேண்டுவது தான் சைவச் சான்றோர் வகுத்த நெறி.

சைவப் புராணங்களிலும் இலக்கியங் களிலும் உயர்வாகப் பேசப்பட்ட அனுசுயா. அருந்ததி, வாசுகி, கண்ணகி, காரைக்கால் அம்மையார், சாவித்திரி, சந்திரமதி, லோபா முத்திரை போன்றோர் இல்லறத்தினால்தான் பெருமை பெற்றனர். பெண் துறவியாகிய ஒரு கதாப்பாத்திரம் கூட வட சைவ இலக்கியங்களில் பேசப்பட வில்லை. இந்த நெறியிலிருந்து விதி விலக்குக் கேட்ட ஔவையார் மங்கைப் பருவம் பெறா மலே முதுமைப் பருவம் வழங்கப்பட்டார்.

இத்தன்மைத்தாகிய இல்லறம் களவு மணமாகவும், கற்பு மணமாகவும் இருக்கலாம். கற்புமணத்தின் சிறப்பை உணர்த்தத் தெய்வ யானையையும், களவு மணத்தின் சிறப்பை உணர்த்த வள்ளியையும் கடிமணம் புரிந்து உலகத்தாருக்கு அறிவுறுத்தினார் முருகன். தெய்வானையிடம் மேற்கொண்டது "உல்லாசம்" என்றும் வள்ளியிடம் மேற்கொண்டது. "சல்லாபம்" என்றும் நகைச் சுவைப்பட பாடினார் அருணகிரிநாகர்.

களவுமணம் என்பது "கந்தர்வ விவாகம்" என்று வடமொழியில் கூறப்படும். எட்டு வகைத் திருமணங்களில் இதை உயர்வாகத் தொல்காப்பியம் பொருள்—3. களவியல் சூத்திரம்—1 கூறுகிறது.

சைவத்தின் களவுமணம்

இக்களவு மணத்தைத் தலைப்படும் சைவக் கன்னிப் பெண்ணின் இயல்புகளைப் பற்றி மதுரைச் சோமசுந்தரக் கடவுளே "இறையனார் களவியல்" என்ற உன்னத நூலில் அறுபது சூத்திரங்களாக வகுத்துள்ளார். உலக வரலாற்றினில் காண முடியாத அற்புதம் இது. உன்னதக் காதல் எப்படி அமைய வேண்டும் என்பதைக் கடவுளே வகுத்துள்ள உண்மை வேறு எந்தச் சமயத்திலும் கண்டிராத புதுமை "தண்ணார் தமிழ் அளிக்கும் தென்பாண்டி நாட்டானை" —திருஅம்மானை பாடல் 10 என்ற வரிகளில் இச்செய்தியை மணிவாசகர் குறிப்பாக அருளினார். தண்ணார் தமிழ் என்பது அகத் திணை பற்றிப் பாடுவது. சூடான தமிழ் என்பது புறத்திணை பற்றிப்பாடுவது.

தான் செய்த "இறையனார் களவியல்" என்ற அகப்பொருள் இலக்கணத்திற்கு ஓர் இலக்கியம் மணிவாசகர் காலம் வரை அமையாதது ஓர் குறையாக இறைவனுக்குத் தோன்றியது. இத் தன்மையாகிய இலக்கிய நூல் ஒரு புலவரால் இயற்றப் பெறாமல் ஓர் சைவ மெய்ஞ்ஞானியால் இயற்றப்படல் வேண்டும் என்பது சிவனின் விருப்பமாக இருந்துள்ளது.

இதற்கான தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டு இருந்தார். மணி வாசகரைக் கொண்டு இலக்கியம் கண்டார். இவ்விலக்கியமே திருக்கோவையார். இந்நூலின் பெருமை ஆன்றோரால் போற்றப்பட்ட சிறப்புக்களில் சில,

"ஆரணங்காண் என்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணம் காண் என்பர் காமுகர் காமநன்னூல் இதென்பர்
ஏரணம்காண் என்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினேநூல்
சிறப்புப்பாயிரம்

வருவாசகத்தின் முற்றுணர்ந்தோனை
வண்தில்லை மன்னைத்
திருவாத ஊர்ச் சிவபாத்தியன் செய்திருச்
சிற்றம்பலப்பொருளைத்
தெருளாத உள்ளத்தவர் கவிபாடிச் சிறப்பிப்பரே"
—நம்பியாண்டார் நம்பி.

"பல்காற் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும் ஆண்டினும் இலையேல்
வடமொழி வெளிபெற வழங்கும் என்க"
—சுவாமிநாத தேசிகர்.

"பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ்சான்ற ஞானப்பனுவற்குப்
பொருள் எனச்சுட்டிய ஒரு பெருஞ் செல்வா!"
—குமரகுருபரர் சுவாமிகள்,
சிதம்பர மும்மணிக்கோவை—23.

சைவக் கன்னிப்பருவம்:

சைவ நங்கையரின் கன்னிப்பருவ இயல்புகள் எவ்வாறு இருந்தன என்பதை விளக்குவது "திருவெம்பாவை". அக்கன்னியரின் இயல்புகள் காதல் வயப்பட்ட பின்னர் எப்படி இருக்கும் என்பதை பாவைப் பதிகத்தில் மணிவாசகர் எடுத்துக் காட்டவில்லை. இவ்வியல்புகளையும் மணிவாசகரே பாடுதல் பொருத்தம் என்று விரும்பினான் இறைவன்.

சைவப் பெண்ணின் வாழ்வு திருமணம் இன்றி நிறைவு பெறாது என்பதை முன்னரே விளக்கியுள்ளேன். தன்னுடைய விருப் பம் நிறைவேறினால் சைவ இலக்கியம் முழுமை பெறும் என்று கருதினார் சிவன்.

"பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக"

என விண்ணப்பித்தார் திருச்சிற்றம்பலம் உடையார். ஈசர் விருப்பத்தை நிறைவு செய்தார் நேசர்.

நிலைநாட்டப்பட்ட உண்மைகள்:

(அ) சைவப் பெண்களிடம்—கன்னிப் பருவத்திலும், மணப்பருவத்திலும் குடிகொள்ள வேண்டிய நற்பண்புகள் பாவையிலும் கோவையிலும் தொகுக்கப்பட்டு முழுமை பெற்றன.

(ஆ) தாய்மை அடைவதே சைவ நங்கையரின் முழு நிறைவு ஆகும் என்பதே சைவக் கோட்பாடு.

(இ) இறையனார் களவியல் என்ற சிவ பெருமானின் அகப்பொருள் இலக்கண நூலுக்கு மிளிர்கின்ற இலக்கியநூல் திருசிற்றம் பலக் கோவையார் என்ற திருக்கோவையார்.

(ஈ) இவ்விலக்கியம் பொய்யடிமைப் புலவரால் செய்யப்படாமல் பொய்யடிமை இல்லாத சைவ மெய்ஞ்ஞானியால் அருளப் பட்டு சைவவுலகம் பேறுபெற்றது.

(உ) சதகம் முதல் காப்பியம் ஈறாகச் சொல்லப்பட்ட 96 வகைப் பிரபந்தங்களில் "கோவை" என்ற நூல்வகைக்கு ஓர் மூல இலக்கியம் செந்தமிழ் மொழிக்கு கிடைத்தது.

(ஊ) சித்திரகவிக்கு ஞான சம்பந்தரும், தாண்டகத்திற்கு அப்பரும், அந்தாதிக்குக் காரைக்கால் அம்மையாரும், உலாவுக்குச் சேரமான் பெருமாள் நாயனாரும் கண்டது போன்று கோவைக்கு வாசகரும் மூல இலக்கியம் கண்டார்.

(எ) இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் நாயகன்—நாயகி பாவம் கூறுவது வைணவத்திற்கு உண்டு. சைவத்திற்கு அது இன்று என்ற கோட்பாட்டை நிலைநாட்டியது பாவையும் கோவையும்.



(ஏ) அகப்பொருட் கோவைக்கு விதிக்கப்பட்ட 2 வகை முதற்பொருளும் 14 வகைக் கருப்பொருளும் 10 வகை உரிப்பொருளும் பொருந்தக் களவு ஒழுக்கத்தையும் கற்பொழுக்கத்தையும் எல்லையாகக் கட்டளைக் கலித்துறை 400 பாடல்களால் திணை முதலாகத் துறை ஈறாகக் கூறப்பட்ட 12 அகப்பாட்டு உறுப்பும் வழுவின்றிப் பாடப் பெறுவது கோவை. 25 கிளவிக் கொத்துக்கள் கொண்டு கோக்கப்படுதலின் கோவை எனப்பட்டது.

கோ—பகுதி
ஐ—செயப்படுபொருள் விகுதி
வகரம்—உடம்படுமெய்

(ஐ) கோவை ஆகிய இலக்கியத்தில் முத் தான்மா நாயகனாகவும் அருட்சக்தி நாயகியா கவும் பாடப்பட வேண்டுமேயொழிய இறைவன் நாயகனாகவும் ஆன்மா நாயகியாகவும் பாடப்படுவது கூடாது என்ற சைவத்தின் விதி முறையை, புலவர் உலகத்திற்கு மணிவாசகரைக் கொண்டு அறிவுறுத்தினார் இறைவன்.

(ஒ) இவ்வுண்மை ஞானிகள் வாக்கில்

இதுதான் சைவத்தின் கோட்பாடு சைவசித்தாந்த மரபு என்ற உண்மையினைக் கீழ்க்கண்ட சைவ மெய்ஞ்ஞானிகளின் அருள் வாக்குகள் மெய்ப்பிக்கின்றன.

"பேரின்பமான பிரமிக் கிழத்தியோடு
ஓரின்பத்து உள்ளான் என்று உந்தீபற
—திருவுந்தியார்—34.

"இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூட நினைந்து
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம் புணர்ந்தாளே"
—திருமந்திரம்—1514.

என்னிடை ஞானவல்லியை நன்
மணம் புணர்த்தி ஆனா ரேயத்து
அரும்பொருள் வழங்கி இறவா வீட்டினில்
இருத்திக் குறையாச் செல்வரோடு கூட்டுதி
மகிழ்ந்தே.

—குமரகுருபர சுவாமிகள்.
சிதம்பர மும்மணிக்கோவை—29.

முடிப்புரை

இதுகாறும் கூறியவற்றால் "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என இறைவன் மணிவாசகரை ஏன் வேண்டினார் என்ற செய்தியை ஒருவாறு ஆய்வு செய்தோம்.

சைவ அறிஞர்களின் சிந்தனைகளையும் மாற்றுக் கருத்துக்கள் இருப்பின் அவற்றையும் வரவேற்பேன். ●

கந்தபுராண நுண்பொருள் நினைவலைகள்!

உங்களுக்கு விளங்கியிருக்கும் என்று எண்ணுகிறேன். வித்திலிருந்து தாமரை தோன்றினாலும் உதவி செய்கின்ற அந்தச்சேற்றின் நினைவு வரவேண்டுமென பங்கஜம் என்று பேர் வைத்தது போல, (பங்கஜ ஞாயம் என்று அதற்குப் பெயர்.) மாயை யிலிருந்து உலகம் தோன்றினாலும் உதவி செய்கின்ற பிரும்மத்தைச் சொல்லிற்று வேதம், பிரும்மத்திலிருந்து உலகம் தோன்றியது என்று. எப்போதும் உதவி செய்தவர்களை நினைக்க வேண்டும்.

நான் ஒரு ஊருக்குப் போய்ப் பிரசங்கம் பண்ணுகிறேன் ஜனங்களுக்கு. என்னை யார் கொண்டு வந்து ஏற்பாடு பண்ணினார்களோ அவருக்குப் பாராட்டு செய்வார்கள். நன்மை வருமானால் அவர்களைத்தான் உலகம் பாராட்டும். அதுபோல இந்த மாயையிலிருந்து உலகம் தோன்றுமானாலும், உதவி செய்கின்ற பிரும மத்தை வேதம் எண்ணுகிறது. பிரும்மத்திலிருந்து உலகம் தோன்றியது என்று. இதற்கு என்ன பேர் சொன்னேன். பங்கஜஞானம். அந்த மாயையாயிருக்கிற கோளம் அதிலே தான் எல்லா உயிர்களும் அடங்கி யிருக்கின்றன. அது ஒரு கோளம்.

அந்த மாயையான கோளத்திலே கோடானு கோடி ஆன்ம அணுக்கள் அடங்கியிருக்கின்றன. இதுதான் மூல நிலை. இந்த உலகம் தோன்றுவதற்கு முன்பு இருந்த நிலையை நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். தங்கம், பொன் வாங்குகிற வியாபாரி வருகிற தங்கத்தை உரைத்துப் பார்த்து அதை ஒரு தேன் மெழுக்கு உருண்டையிலே ஒட்டிவைத்துக் கொள்வார். இவ்வளவு சிறிய துண்டாயிருக்கிற தேன் மெழுக்கு உருண்டையிலே கோடிக்கணக்கான தங்க அணுக்கள் அடங்கியிருக்குமாப் போலே, மாயையான கோளத்திலே ஆன்ம கோடிகளெல்லாம் அடங்கிக் கிடக்கின்றன. அப்படியிருக்கிற ஆன்மாக்களுக்கு நலம் செய்ய வேண்டுமென்று அந்த அருட்பெருஞ்ஜோதி எண்ணிற்று. அந்த எண்ணிய எண்ணத்துக்குத் தனிப்பெருங்கருணை துணை செய்தது. அப்படி எந்த தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதியிலிருந்து வெளிப்பட்டது. அப்படி முதன் முதலாக வெளிப்பட்ட அந்த நிலைக்கு பராசக்தி என்று பெயர்.

சென்ற இதழ் தொடர்ச்சி

என்ன காரணம்? வித்திலிருந்து தாமரை தோன்றுமானாலும் அந்த வித்தை, கட்டையில், கல்லில் வைத்தால் தாமரை தோன்றாது. இந்தப் பலகை மேலே அந்த வித்தை வைத்தால் தாமரை தோன்றாது. அப்பொழுது வித்திலே இருந்து தோன்றுகிற தாமரையும் சேற்றிலே நட்டால்தான் அந்தச் சேற்றின் துணையினாலே விதையிலிருந்து தாமரை வெளிப்படுவதற்கு உதவி செய்கின்றது சேறு. அந்த உதவி செய்கின்ற சேற்றின் நினைவு வர வேண்டுமென்று பங்கஜம் என்று பெயர் வைத்தார்கள். அதுபோலே மாயையிலிருந்து உலகம் தோன்றுகிறது. மாயை அசித்து. அசித்திலிருந்து அசித்து தோன்றுகிறது. அந்த மாயையாயிருக்கிற மூலப் பொருளிலிருந்து உலகம் தோன்றுவதற்கு வித்தாயிருக்கிற பிரம்மம் உதவி செய்வதாலே பிரம்மத்திலிருந்து உலகம் தோன்றியது என்று வேதம் சொல்லுகின்றது.

– திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அப்பொழுது அந்தக் கோளம் கொஞ்சம் விரிவாக ஆயிற்று. அந்தப் பராசக்தியின் வேகத்தை இந்த உயிர்கள் தாங்க மாட்டா என்று கருதிய அந்தத் திருவருள் அதிலிருந்து ஒரு ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது. அப்பொழுது இந்த மாயையான கோளத்திலே மூன்று கோடு பிரிந்தது. ஒன்று சுத்த மாயா, ஒன்று அசுத்த மாயா, ஒன்று மிஸ்ர மாயா, அப்பொழுது அதற்குப் பெயர் ஆதிசக்தி. முதலிலே பராசக்தி. இப்பொழுது ஆதி சக்தி. அந்த ஆதிசக்தியின் வேகத்தை இந்த உயிர்கள் தாங்க மாட்டா என்று எண்ணி மிகப் பெருங் கருணையினாலே. அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது. அதற்கு ஞான சக்தி என்று பெயர். அப்பொழுது இந்த மாயையான கோளத்திலே இருக்கிற உயிர்களுக்குக் கொஞ்சம் ஒளி உண்டாயிற்று. விடியற் காலம் 5—30 மணிக்குக் கொஞ்சமாகக் கிடைக்கும் ஒளி போலே அதனுடைய வேகத்தை இந்த உயிர்கள் கொஞ்சம் நெளியத் தொடங்கின. இப்பொழுது இந்த உயிர்களுக்குப் பெயர் கிடையாது. மதம் கிடையாது. முஸ்லிம் உயிரா, கிறிஸ்துவன் உயிரா, பிராமணன் உயிரா, முதலியார் உயிரா, ஆண் உயிரா, பெண் உயிரா, ஒன்றும் கிடையாது. அணுமாத்திரம் தான் இருக்கும் அந்த உயிரிலே. மறுபடியும் அதன் வேகத்தை இந்த உயிர்கள் தாங்க மாட்டா என்று கருதி ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது. அதுதான் இச்சா சக்தி. புரிந்தாலும் புரியாவிட்டாலும் இதுதான் நம் நிலை. உதாரணம் சொன்னால் கொஞ்சம் விளங்கும்.

சீர்காழியிலே ஒரு பயிர் வயல். அதற்கு நலம் செய்ய வேண்டுமென்று குடகுமலை எண்ணிற்று. குடகு மலையிலிருந்து இவ்வளவு சிறியதாகவா வரும்? பிரும்மாண்டமான காவிரி ஆறு. அப்படியே நேரே வந்து பாய்ந்தால் இந்த வயலோ, பயிரோ இருக்குமா? அப்பொழுது கொடுமுடி என்ற இடத்திலே பத்திலே ஒரு பங்கு பிரிகிறது. பெரிய ஆற்றிலிருந்து இவ்வளவு சிறிய வாய்க்காலாகப் பிரிய முடியாது. எங்கே பிரிந்தது? கொடு முடியிலே, அது ஒரு 60, 70 மைல் (சமயபுரத்துக்கு) வந்து 10—ல் ஒரு பங்கு பிரிகிறது. அப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து இங்கு வந்து பாய்கிறபோது அப்பவே நாலு பயிர் சாயும். அப்பொழுது சீர்காழியிலோ, மாயூரத்திலோ இருக்கின்ற பயிர் தழைக்க வேண்டுமென்று, குடகு மலையிலே இருக்கின்ற பயிர் தழைக்க வேண்டுமென்று, குடகு மலையிலே இருக்கிற காவேரி ஆறு கால் காலாகப் பிரிந்து வருவது போல, சக்தி பிரிந்து, பிரிந்து வந்து உயிர்களுக்கு அருள் புரிகின்றது. இன்னொரு உதாரணம். நான் குடும்பத்தோடு குற்றாலம் போயிருக்கிறேன். குழந்தை தண்ணீர் கேட்டது. குழந்தை வாயைக் கொண்டு போய் அப்படியே அருவியில் காட்டினால் என்ன ஆகும்?

கருணையோடு வருகிற அருவி, வாயை வைத்தால் கிழித்துவிடும். சங்கில் கொண்டு வர முடியுமா? குடத்திலே கொண்டு வந்து, பஞ்ச பாத்திரத்திலே விட்டு, அதிலிருந்தல்லவா சங்கில் விட வேண்டும். இரண்டு படி அரிசி வடித்தால் அப்படியேவா இலையில் கொட்டுவார்கள்? அதை வேறொரு குண்டானிலே வாங்கி, தட்டில் தள்ளி இலையில் போட வேண்டும்.

அது போலத்தான் அந்தக் கருணை பிரிந்து பிரிந்து வருகிறது. இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும். இன்னொரு முறை வரிசையாகச் சொல்லுகிறேன். அது அருட்பெருஞ்ஜோதி. மாயையான கோளம்.

அந்தக் கோடிக்கணக்கான ஆன்மாக்கள் அதில் கிடந்தன. அந்த ஆன்மாக்களுக்குள்ளே வித்தியாசம் கிடையாது. உயர்ந்த ஆத்மா, தாழ்ந்த ஆத்மா, அறிவுள்ள ஆத்மா, அறிவில்லாத ஆத்மா, ஐயர் ஆத்மா, செட்டியார் ஆத்மா, முதலியார் ஆத்மா என்றும் கிடையாது. எல்லாம் ஒரே பெயர்தான்.

அப்படி இருக்கிற உயிர்களுக்கு நலம் செய்ய வேண்டும் என்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் எண்ணினான். அப்படி எண்ணிய எண்ணத்திற்குத் தனிப்பெருங்கருணை என்று பெயர். அருட்பெரும் ஜோதி, தனிப் பெருங்கருணை. ஐந்து 'செல்' போட்ட டார்ச் லைட்டிலிருந்து வெளிச்சம் வருவது போல, அந்த அருட்பெருஞ் ஜோதியிலிருந்து ஒளி புறப் பட்டது, பராசக்தி.

அப்பொழுது கோளம் பெரியதாயிற்று. அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது; அது ஆதிசக்தி. அப்பொழுது மூன்று ரேகைகள் பிரிந்தன. சுத்த மாயா, அசுத்த மாயா, மிஸ்ர மாயா என்று. மறுபடியும் ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது; ஞானசக்தி.

அப்பொழுது அந்த உயிர்களுக்குக் கொஞ்சம் வெளிச்சம் உண்டாயிற்று. மறுபடியும் அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது; கிரியா சக்தி. அப்பொழுது உயிர்கள் நெளியத் தொடங்கின. அதிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறு பிரிந்தது; அது இச்சா சக்தி.

அது மூன்று மாயை சொன்னேனே. சுத்த மாயா என்ற விந்திலே அந்த அருள் வீழ்ச்சி வந்து விழுந்தது. அப்படி விழுந்தவுடனே அந்த விந்து சுழன்றது. என் கையைப் பாருங்கள். காற்றாடி சுழன்றால் ஒரு சத்தம் வருவது போல அந்தச் சுழன்ற சுழற்சி அதிலிருந்து உம் என்று ஒரு சத்தம். சுழன்றது விந்து. வந்தது நாதம். அதுதான் விந்து நாதம். அதுதான் பிள்ளையார் சுழி. (உ) இதை அருணகிரிநாதர் சொன்னார்.

(தொடரும்)

– நன்றி : செஞ்சொல் உரைக்கோவை நூல்

திருவுசாத்தானம் (எனும்) கோவிலூர்

"நீரிடைத் துயின்றவன் றம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்ரீ வன்னநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தயெம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே"–
– திருஞானசம்பந்தர்

கோயிலும் இருப்பிடமும்:

சோழநாட்டுக் காவிரித் தென் கரையில் அமைந்த பாடல்பெற்ற சைவத் திருத்தலங்களுள் 107 வது திருத்தலமாக விளங்குகிறது. இத்தலம் கோவிலூர் என்றும், திருவுசாத்தானம் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தலம் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டம், முத்துப்பேட்டை பேரூராட்சிக்கு ஒரு கிலோமீட்டர் தொலைவில் வடபுறமாக அமைந்துள்ளது. இயற்கை எழில் சூழ்ந்த அழகிய கிராமமாக கோவிலூர் விளங்குகிறது. இத்தலம் மயிலாடுதுறை—காரைக்குடி புகைவண்டித் தொடரில் முத்துப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் மன்னார்குடி சாலையில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் அழகான ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் உட்புறம் மூன்று நிலை கோபுரம், சிங்கள கோபுரம் என்ற பெயரில் அமைந்துள்ளன. அருள்மிகு பெரியநாயகி அம்பாள் தெற்கு நோக்கி தனிக்கோயிலாக அமையப் பெற்றுள்ளது.

இறைவன் : அருள்மிகு மந்திரபுரீஸ்வரர்.

இறைவி : அருள்மிகு பெரியநாயகி அம்மன்.

விநாயகர்: சூதவன விநாயகர்(ஸ்தல விநாயகர்) கையில் மாவிலையும், தும்பிக்கையில் மாங் கனியுடன் காட்சி அளிக்கிறார்.

கோயில் அமைப்பு:

தென்னை மரங்கள் அடர்ந்த பொழில்களால் சூழப்பெற்ற அழகிய ஊரின் நடுவே ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் கிழக்கு நோக்கி இத்திருக் கோயில் அமைந்துள்ளது. இரண்டு திருசுற்றுக்களும் உள்ளன. திருக்கோயிலின் எதிரே அனுமன் தீர்த்த மும் விநாயகர் சன்னதியும் உள்ளது. கோயிலின் உள்ளே மூன்று நிலைக்கோபுரம் சிங்கள கோபுரம் என்ற பெயரில் அமைந்துள்ளது. சுவாமி சன்னதியின் நுழைவு வாயிலின் துவார பாலகர் அருகே குபேரனன் வழிபட்ட சங்கநிதி, பதுமநிதி உள்ளன. கருவறையில் மூலவர் சதுர வடிவத்தில் சுயம்பு முர்த்தியாக இடப்புறம் சற்று சாய்ந்தும், குனிந்தும் மந்திரபுரீஸ்வரராகவும், உசாத்தானராகவும் காட்சி அளிக்கிறார். முதல் திருசுற்று மாளிகையின் தென்புறம்

–தமிழ்ப்புலவர். ப.சிவகாமி,

வடக்கு நோக்கி அசுரனை மிதித்த கோலத்தில் வடபத்திரகாளியும் ராகு கேதுவும் தனித்தனியாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர்.

தெற்கே தெட்சணாமூர்த்தியும், தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கி ஸ்தல சூதவன விநாயகரும் அருள்பாலிக்கின்றனர்.

திருமாளிகை சுற்றின் மேற்கு புறம் வருணன் பூஜித்த லிங்கம், இராமர் பூஜித்த லிங்கம், இந்திரன், பிரம்மன், அன்னபூர்ணி, சரஸ்வதி, கெஜ லெட்சுமி, சுப்ரமணியர் சன்னதியும் அமைந்துள்ளன.

வடமேற்கு திருச்சுற்று மாளிகையில் ஸ்ரீநடராஜபெருமானுக்கு தனியே சன்னதி உள்ளது. ஸ்ரீ சண்டிகேஸ்வரருக்கும், சனி பகவானுக்கும் தனி சன்னதி உள்ளது. அதனை அடுத்து கீழ்புறம் மேற்கு நோக்கி ஸ்ரீபைரவர், ஸ்ரீசந்திரன் உள்ளனர்.

திருசுற்று மாளிகையின் கீழ்புறம் சூரியன் தென்புறம் விநாயகர் அறுபத்துமூன்று நாயன்மார்களும் மற்றும் சப்த மாதர்களும் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். இத்திருக்கோயிலில் நவக்கிரகம் கிடையாது. ஆனால் நவகன்னிகைகள் ஒரே இடத்தில் அமைந்து அருள்பாலிக்கின்றனர். அருள்மிகு பெரிநாயகி அம்மன் சன்னதி தெற்கு நோக்கி தனிக்கோயிலாக அமைந்துள்ளது. தென்மேற்கு மூலையில் தலவிருட்சமாக சூதவனம் என்னும் மாமரம் அமைந்துள்ளது.



தலச்சிறப்பு:

இத்தலத்து இறைவன் சிவலிங்கம் வெண்மை நிறத்துடன் காணப்படுவது தனிச்சிறப்பு. மூன்று திருமுகங்களுடனும் முக்கால்களுடனும் விளங்கும் சுரஹரேஸ்வரர் (சுரதேவர்) திருவுருவம் தரிசிக்கத்தக்கது. குபேரன் வழிப்பட்ட சங்கநிதியும் பதுமநிதியும் துவார பால கருடன் இருப்பது சிறப்பிற்குரியது. அதிகார நந்தி அம்மையின் திருவுருவத்துடன் கையில் பிரம்புடன் காட்சி அளிப்பது தனிச்சிறப்பாகும்.

தீர்த்தங்கள்:

மணிகர்ணிகை, மார்க்கண்டேயர், நெல்லித்தீர்த்தம், குஞ்சித் தீர்த்தம் ஆதிஷேசன்.

திருவிழா:

சித்திரை பிரமோற்சவம் ஆகும். ஆடிப்பூரம், ஆவணி மூலம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் போன்ற வார மாதாந்திர திருவிழாக்களும் நடைபெறுகின்றன.

தலவரலாறு:

இத்திருக்கோயில் மிகப்பழமையானது. 13—ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் கட்டப்பட்டது என தெரிகிறது. இராம பிரான், இலக்குமன், ஜாம்புவான், சுக்ரீவன் முதலியோர் படை சூழ இத்தலத்திற்கு வந்து வழிபட்ட தலம்.

இராமர் சேதுபந்தனம் செய்வதற்கு இத்தலத்து இறைவனிடம் மந்திர ஆலோசனை பெற்று சென்றார். ஆதலால் இறைவன் மந்திரபுரீஸ்வரர் என வழங்கப்படுகிறார். இராமர் கடலில் அணை கட்டுவதற்கு வழி வகைகளை உசாவிய தலமாதலால் இவ்வூர் உசாத்தானம் எனப்பெயர் பெற்றது.

இராமர் இலங்கைக்குச் செல்லவும் போரில் வெற்றி பெறவும் வேதாரண்யம் (திருமறைக்காடு), மீமிசல், மணமேல்குடி ஆகிய இடங்களில் அணைக்கட்டுகிறார். அணையை கடல் அலைகளும், மீன்களும் கலைத்து விடுகின்றன.

தடைகளை நீக்க வேண்டி இராமபிரான் இத்தலம் வந்து இறைவனை வழிப்பட்டு மந்திராலோசனை செய்த பின்னரே கடலில் பாலம் கட்டியதாக புராணங்கள் கூறுகின்றன. இராமபிரானுக்கு மந்திர உபதேசம் வழங்கியதால் இறைவன் சற்று இடப்புறம் சாய்ந்தும், குனிந்தும் காணப்படுகிறார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும்

சிறப்புடையது. இராமர், ஆதிசேஷம், மார்க்கண்டேயர் முதலியோர் வந்து வழிப்பட்ட தலம்.

திருகடவூரில் மார்க்கண்டேயர் முனிவர் தன் மரண காலத்தை சிவ அனுகிரகத்தால் மாற்றக்கருதி சிவபூஜை மேற்கொண்டு செய்யும்போது காலன் தன் பாசக்கயிற்றால் சிவலிங்கத்தையும் சேர்த்து இழுக்கும்பொழுது உடல் முழுவதும் வடுக்கல் ஏற்பட்டன. மார்க்கண்டேயர் தன் உடல் மீது ஏற்பட்ட வடுக்கள் நீங்க வேண்டி காசியில் வழிபட்டு கங்கையில் நீராடி, காலபைரவரின் ஆலோசனைப்படி இத்திருத்தலத்தில் தன்பெயரால் தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடி, இறைவனை வழிபட்டு வடுக்கள் நீங்கப்பெற்றார் என புராணங்கள் கூறுகின்றன.

வருணன் பாதாள உலகில் யாகம் செய்வதற்கு இப்பூவுலகிலிருந்து முனிவர்களை அழைத்து சென்றவர் யாகம் முடிந்து முனிவர்களை அனுப்பாமல் காலம் தாழ்த்தியதால் அஷ்டவக்ர முனிவர் வருணனுக்கு சாபமிட்டார். சாபத்தால் தொழுநோய்பிடித்து பைத்தியமாக அலைந்து திரிந்து இத்தலத்து இறைவனை வழிபட்டதால் வருணன் சாபம் நீங்கப்பெற்றார். மூன்று திருமுகங்களுடனும், முக்கால்களுடனும் விளங்கும் சுரஹரேஸ்வரர் (சுரதேவர்) திருவுருவம் தரிசிக்கத்தக்கது. இவரை வழிபடுவோர் சுர நோய் நீங்கி நலம் பெறுகின்றனர்.

புராண வரலாறு:

காசிபமுனிவரின் மனைவி வினதை மகன் கருடன் தன் தாயை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க அமுதகலசத்தை எடுத்து வருகிறான். இந்திரன் பின்தொடர, கருடன் வேகமாக வந்ததால் அமுத துளிகள் சிந்தியது. சிந்திய இடங்களில் மாமரங்கள் தோன்றி சூதவனமாக காட்சி தருகிறது. மேலும் சிந்திய அமுத துளிகள் இறைவன் முடிமேல் பட்டதால் இறைவன் வெண்மை நிறமாக காட்சியளிக்கிறார்.

வடவரையை மத்தாக்கி வாசுகி என்னும் பாம்பை நாணாக்கி தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலை கடைந்து, கிடைத்த அமுதத்தை இத்தலத்து இறைவனுக்கு நிவேதித்த பின்னரே, தேவர்களுக்கு வழங்கினர்.

பாற்கடலில் அமுதத்திற்கு முன்னர் தோன்றி ஆலகால விஷம் என்ற கொடிய நஞ்சையும், பிரதோஷ காலத்தில் பருகி உலகைக்காத்த,

"காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தயெம் சீருடைச்சேடர் வாழ் திருவுசாத்தானம்"

எனவும், இத்தலத்து தேவாரப்பாடல் சிறப்பிக்கின்றது. திருமாலும் இப்பெருமானிடம் லிங்கம் பெற்று பூசித்ததாக சூதவனப் புராணம் கூறுகிறது.

தலப்பெருமை:

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. பதஞ்சலி முனிவர் கூட்டத்துடன் இத்தலம் வந்து சூதவனத்தை (காடுகளை) அழித்து திருக்கோயில் அமைத்து வழிப்பட்டார். இத்திருக்கோயிலின் செப்பு திருமேனி வடிவில் கையில் லிங்கத்துடன் பதஞ்சலி முனிவர் காட்சி தருகிறார். (பதஞ்சலி முனிவர் ஆதிசேஷனன் அவதாரம் என்று கூறுவர் சிவபெருமானின் திருநடனத்தை காணும் பொருட்டு பதஞ்சலி முனிவராக அவதரித்தார்.

ஓவியங்கள்: இத்தலக்கோயிலின் தல வரலாற்றை உணர்த்தும் வண்ணம் பழங்கால வண்ண ஓவியங்கள் மண்டபம் மேல் தளத்தில் தீட்டப் பட்டுள்ளன.

சிற்பங்கள்: அம்மன் கோயில் மண் டப தூண்களில் சிங்கம் மற்றும் யாளினை உடைய உருவங்கள் செதுக்கப்பட் டுள்ளன. சில தூண்களில் வேலை பாடுகளுடன் கூடிய சிற்பங்கள் அமைந்துள்ளது. மேலும் அம்மன் கோயில் நுழைவு வாயிலில் இரு தூண்களில் விநாயகர், பதஞ்சலி முனிவர், அனுமார், அஷ்டலட்சுமி, சரஸ்வதி முதலியோருடைய சிற்பங்கள் உள்ளன. இவை அனைத்தும் கலைச் சிறப்பு வாய்ந்தவையாகும்.

கல்வெட்டுகள்: இத்திருக்கோயிலில் விக்கிரம சோழன், மூன்றாம் குலோத் துங்கன், மூன்றாம் இராஜராஜன்,

சுந்தரபாண்டியன் காலத்திய 54 கல்வெட் டுகள் உள்ளன. புறக் கரம்பை நாட்டு பிரம்ம தேசமாகிய கேரள குலாசினி சதுர்வேதி மங்கலத்து என்ற, கல் வெட்டுகளில் இவ்வூர் திருவுசாத்தானம் என்று அழைக்கப்படுகிறது.

மண்டபங்கள்: கர்ப்ப கிரகம் மண்டபம், ரிசப மண்டபம், ஸ்நபன மண்டபம், நாட்டிய மண்டபம், மகா மண் டபம், அலங்கார மண் டபம், முக மண்டபம், திருச்சபை மண்டபம் ஆகிய மண்டபங்களு டன் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

கலைகள் மற்றும் கட்டிட கலைகள்: சோழர் காலத் தில் 13—ஆம் நூற்றாண் டில் கட்டப்பட்டுள்ளது.

ஐந்துநிலை இராஜகோபுரம் மற்றும் சிங்கள கோபுரமும் கட்டிட கலைக்கு சிறப்பு வாய்ந்தவையாக அமைந்துள் ளன.

பாடல்கள்: “திருஞானசம்பந்தர் திருவுசாத்தான பதிகம்” பாடல்கள் பதி னொன்று பாடியுள்ளார். பதினொறு பாடல்களில் 5,6—ம் கிடைக்கவில்லை.

முக்கிய உபசன்னதிகள்: சூதவன விநாயகர் (ஸ்தல விநாயகர்) சன்னதி, குருபகவான் சன்னதி, முருகன் சன்னதி, சனீஸ்வர பகவான் சன்னதி, நடராஜர் சன்னதி, அம்பாள் சன்னதி போன்ற வைகள் முக்கிய உபசன்னதிகளாக விளங்குகின்றன.

அதிசய சிவலிங்கம்: கருடபகவான் ஆகாய மார்க்கமாக அமுத கலசத்தை எடுத்தும் செல்லும் போது, இந்திரன் பின்தொடர, வேகமாக வந்ததால் அமுத துளிகள் சிந்தியது. சிந்திய அமுத

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு து.இராசேந்திரன், இ.ஆ.ப. ஆணையாளர் கூடுதல் பொறுப்பு தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை, சென்னை—600034.
தொலைபேசி எண் : 28334811 / 12 / 13

ஆசிரியர் (கூ.பொ) : ம.தேவேந்திரன், பி.எஸ்ஸி, பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை—86
தொலைபேசி :23450920 / 28117575

புராதன சின்னங்களைப் பாதுகாப்பது குறித்த இணையத்தளத்தை மேதகு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் 16–06–2007 அன்று தொடங்கி வைத்தார். உடன் 'ரீச்' பவுண்டேஷன்ஸ் நிறுவன இயக்குநர் திரு.டி.சத்யமூர்த்தி அவர்கள் அகாடமியின் தலைவர் ரவிசாம் அவர்கள், முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.ப.தனபால் அவர்கள்.

துளிகள் இறைவன் முடி மீது பட்டதால் "வெண்மை நிறமாக" காட்சி அளிக்கிறார்.

அதிசய நடனம்: தில்லையில் சாயரட்சை நேரத்தில் விஸ்வாமித்திரர் அருள் மிகு நடராஜரின் ஆனந்த திருநடனத்தை காணாது வருந்துகிறார். வருந்திய விசுவாமித்திரர் இத்திருக்கோயிலுக்கு வருகிறார். தில்லையில் காண வேண்டிய நடராஜரின் ஆனந்த திருநடனத்தை இத்திருக் கோயிலில் கண்டதால் இக்கோயில் ஆதிச் சிதம்பரம் என்றும் கோவிலூர் என்றும் அழைக் கப்படுகிறது.

பூஜை காலங்கள்: இத்திருக்கோயிலில் தினந் தோறும் காமிக ஆகமப்படி ஐந்து கால பூஜை செவ்வனே நடைபெற்று வருகின்றன.

காலசந்தி : காலை 8.30 மணி முதல் 9.30 மணிவரை

உச்சிக்காலம் : காலை 11.30 மணி முதல் 12.00 மணி வரை

சாயரட்சை : மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை

இரண்டாம் காலம் : இரவு 7.00 மணி முதல் 7.30 மணி வரை

அர்த்தஜாமம் : இரவு 8.30 மணி முதல் 9.30 மணி வரை

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரை

மாலை 4.00 மணி முதல் 9.00 மணி வரை

தல விருட்சம்: இத்தலத்திற்கு தல விருட்சமாக மாமரம் என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வூர் மாங்காடு என்றும், சூதவனம் என்றும் புராணங்களில் அழைக்கப்படு கிறது. இத்தல விருட்சம் கோயிலின் பின்புறம் அமைந்துள்ளது.

நிறைவு:

நம் நாட்டு பாரம்பரிய மிக்க பண்பாட்டுச் செல்வங்களை பாதுகாப்பது நமது ஒவ்வொருவரின் கடமையாகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க, நாம் அனைவரும் அருள்மிகு மந்திர புரீஸ்வரரையும், அருள்மிகு பெரியநாயகியையும் ஆன்மாக்கள் லயிக்கும் வண்ணம் ஆலயம் வந்து வழிப்பட்டு, அவர் தம் அருளால் மண்ணில் நல்லவண்ணம் மரணமில்லா பெருவாழ்வு வாழ்வாங்கு வாழ இறையருள் பெற வருக வருக என வரவேற்று எல்லா செல்வங்களும் பெற அழைக்கின்றோம்.

"வரைதிரிந் திழியுநீர் வளவயற் புகலிமன்
திரைதிரிந் தெறிகடல் திருவுசாத் தானரை
உரைதெரி ந்துணருஞ்சம் பந்தனொண்
டமிழ்வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே".

பதிவு எண் :TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08

என்றும் உங்கள்
சேவையில்

நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062

Email : inquiry@nalli.com Website : www.nalli.com